# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520
இருமாதத்திற்கொருமுறை
மார்ச் - ஏப்ரல் 2025
ஆண்டு 5 ▲ இதழ் 05
விலை 250/-



'மின்னும் தாரகை'

## கலாபூஷணம் நூருல் அயின் நஜிமுல் ஹுசைன்



# இரகசியச் சுரங்கம்

ரகசியப் பூக்கள் பூத்த,
பெண்ணின் மனது,
ஆழ்பெருங் கடல்.

அரும்பியும் அரும்பாத,
அத்தனை காதல்களும்,
புதையுண்டு பாசிகளாய்...
எந்தச் சுழியோடிகளாலும்,
முத்தெடுக்க முடியாது.

அதிசயங்களிங்கே,
புதையுண்டு குவிந்து,
கடற் பாறைகளாய்,
கனத்துயர்ந்திடினும்,
எந்தக் கொம்பனாலும்,
தகர்க்க முடியாது வலிது.

இருப்பும் விருப்பும்,
எவராலும் அவளுள்,
வளர்க்க முடியாத திமிங்கிலம்.

வன்கணவனின்,
கோரத் தாக்குதல்கள் கூட,
புதைந்து கிடக்கலாம்.
எந்தக் கொம்பனின்,
ஆராய்ச்சியிலும் அகப்படாத,
ரகசியப் பொக்கிஷம் அது.

**மர்ளியா சக்காப்.**
திருகோணமலை.


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை
மார்ச் - ஏப்ரல் 2025
ஆண்டு 5 ▲ இதழ் 05

**பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா**
Chief Editor & publisher : Sithy Wafeera

**சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**
Hon. editor : Tamilnenjam Amine

**ஆசிரியர் குழு :**
Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்
மின்னத் ஸரா பரூஸ்

**வடிவமைப்பு:**
Omardeen Aysha Shakeela

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
email :
muththamiz.kalasam@gmail.com

The Editor of "Muththamizh kalasam",
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்! (அஸ்ஸலாமு அலைக்கும்)

இரு மாதங்களுக்கொரு முறை வெளிவரும் எமது சஞ்சிகையானது, தனது இருபத்தொன்பதாவது இதழை மொட்டவிழ்ப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் ஆதரவின் மூலமே இது சாத்தியமாகி உள்ளது. கரம் கொடுத்து இணைந்து பயணிக்கும் அனைவருக்கும் நன்றிகளை மனதின் ஆழத்திலிருந்து தெரிவிக்கிறேன்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான புனித நோன்பு ஆரம் பித்திருக்கிறது.ஆயிரம் மாதங்களை விட சிறப்பு வாய்ந்த லைலத்துல் கத்ர் எனும் இரவை ரமழானின் கடைசிப்பத்தில் இறைவன் மறைத்து வைத்துள்ளான். அதற்கான காரணமே, இந்த இரவை எதிர்பார்ப்புடன் தேடி, அதிகமான நன் மைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதுதான். மாண்புகளை அள்ளித்தரும் இப்புனித காலத்தில், இறைவனிடம் நமது பாவங்களுக்காக பாவமன்னிப்புக் கேட்பதுடன், எமது எண்ணங்களைத் தூய்மையாக்கி ஆயுளின் எல்லை வரை நேயத்துடன் பயணிப்போம். வரப்போகும் மார்ச் எட்டாம் திகதி மகளிர் தினத்தை சிறப்பாகக்கொண்டாடக்காத்திருப்பீர்கள்.இப்போதெல்லாம்மகளிரின்ஆற்றல்கள் உலகத்தின் பார்வை யையே அவர்கள் புறம் திருப்பியுள்ளது எனலாம். அவர்களின் சிந்தனைப் பரப்பில் சிறகு விரிக்கும் எல்லையற்ற ஆற்றல்கள், அவர்களுக்கென தனி அடையாளத்தைக் கொடுத்துள்ளமையும் வரவேற்கத்தக்கதாகும். பெண்களின் திறமைகளை போற்றி வரவேற்றுக் கொண்டாடும் உலகம் எம்மை பெருமிதம் கொள்ள வைத்தாலும், உலகத்தில் ஏதோ ஓர் மூலையில் அவர்களுக்கெதிரான வன்முறைகளும், அடக்கு முறைகளும் இல்லாமல் இல்லை. அவர்களுக்காக எம் எழுதுகோல் குனிந்து, அவர்களை நிமிர வைக்கட்டும்! அத்துடன், தமக்கு சுதந்திரமில்லையென குரல் கொடுத்து, ஆணாதிக்க அடக்குமுறைகளால் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என அங்கலாய்க்கும் பெண்களும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்தான். இதிலிருந்து வெளிவந்து சாதிப்பதும், பெண்களாகிய நம் மனோபலத்தில்தான் தங்கியுள்ளது. ஆகவே இனியும் உலகத்தைக் குறை கூறுவதை விடுத்து நமக்கென சுய அடையாளத்தை உருவாக்க முனைவோம். பெண்கள் தம்மை உணர்ந்து, நேர் கொண்ட பார்வையுடன் தமது இலக்கு நோக்கி நகர்ந்தால் வெற்றி நிச்சயம்! நல்வாழ்த்துகள்!

நன்றி!
வ.ஃபிரா வ.ஃபி
( பிரதம ஆசிரியர்)

# வந்து போகிறாய்....

உன்னை வரவேற்க
எத்தனையோ ஆயத்தங்கள்
முப்பது நாள் விருந்தாளி நீயாம்..
எத்தனை வகைச் சமையல்கள்..
விருந்தாளி நீயா நாங்களா..

ஒவ்வொரு வருடமும்
தவறாமல் வருகின்றாய்...
நீ கொண்டு வருவதை
நாங்கள் பெற்றுக் கொண்டோமா...

உயர் நோன்பின் பயிற்சியில்
நல்லன கற்றுக் கொண்டோமா..
எத்தனைப் பிணைப்புக்கள்
உனக்குள்ளே...
எத்தனையோ பிளவுகள்
எமக்குள்ளே

சுடராகத்தான் நீயும் வருகின்றாய்..
அடர் இருளைத் துரத்திட இராத்
தொழுகையாய் ஒளிர்கின்றாய்

புலனடக்கச் சொல்லி நீ
அழைக்கின்றாய்
தொடர்ந்திருக்கத் தெரியாமல்
அலைகின்றோம்.

ஈகையால் இன்புறவே கரம்
நீட்டுகின்றாய்.
ஈயாதோர் இன்னுமிங்கே எதைக்
கூட்டுகின்றார்

உனக்காக உனக்காக என்பதுதான்
கொள்கை ஆனால் எமக்காக
எமக்காக என்பதே வாழ்க்கை

சிறுகச் சிறுகக் கரையும் புவியில்
பிறையாய்த் தொடர்கிறாய்
உன் பணியில்

மேவிடும் சிறப்பின் அருட்பிழம்பு நீ
மானிடப் பிறப்பாய்
மனப்பிறழ்வில் நாம்

அடுத்த நிறுத்தத்தில் இறங்கிச்
செல்லும் பயணி போலவே...
நீயும் வந்து போகிறாய்
நாங்கள் இன்னும்..
நாங்களாகவே
வாழ்க்கைப் பயணத்தில்.!

**மக்கொனையூராள்**





# மாதரின் மகிமைதனைப் போற்றுவோம்

மகளிர் தினச் சிறப்புக் கட்டுரை

'மங்கையராய்ப் பிறப்பதற்கு -நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா!'

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் மாதரின் மகிமைதனை மகத்தான வரிகளில் வடித்திருந்தார்.

மண்ணிலே மனுவுயிர் தழைத்திட, நமது தங்கங்களான பெண்ணுயிர்கள் மகிழ்வாய் வாழ்ந்திட வேண்டுமென்பதே நமக்கான பேராசையாகும்.

பெண்ணை வீட்டுக்குள்ளே பூட்டி வைத்து வாழவே, ஆணினம் அன்று முனைந்தது. இல்லறத்தின் அன்புப் பரிசாக ஆண் பிறந்தால் வரவு, என்றும், பெண் பிறந்தால் செலவு என்றும் உரைப்போர் இன்று முளர். தாயாகிச் சேய்கள் ஈன்று மனையறம் காத்திடவே மங்கையர் பிறப்பெடுத்தனர். என்றிருந்த காலம் இன்று, சற்று மாறிக் கொண்டிருக்கிறது.

மண்ணிலே மகளிரினம் 18ம் நூற்றாண்டில் இருந்தே தனது உரிமை களைக் கேட்டுப் போராடியதாக அறியக் கிடக்கின்றது.

நியூயோர்க் நகரில் அன்று நெசவுத் தொழிற்சாலையில் வேலை செய்த பெண்களுக்குக் குறைவான ஊதியம் வழங்கப்பட்டது. அவர்களிடம் கூடுதலான நேரம் வேலை வாங்கப்பட்டது.

அவர்கள் 16 மணிநேரம் பணி புரிய வேண்டி இருந்தது! அதே

நேரம் ஆண்களுக்குக் கிடைக்கும் சம்பளம், அதே பணியைச் செய்யும் பெண்களுக்குச் சமமாக வழங்கப்படவில்லை. எனப் பல அநீதிகள் இழைக்கப்பட்டன. அதனால்,உழைக்கும் பெண்கள் ஒன்று சேர்ந்து தங்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போராட்டங்களில் இறங்கினர்.

ஆரம்பத்தில் பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் நியூயோர்க்கிலும் போராட்டங்கள் இடம் பெற்றன! பின்னர் ரஷ்யாவிலும் உரிமைப் போராட்டங்கள் நிகழ்ந்தன.

நியூயோர்க்கில் 1908ம் ஆண்டின் போராட்டத்தில் சுமார் 15ஆயிரம் பெண்கள் கலந்து கொண்டனர். அப்போது, சுதந்திரம் சமத்துவம், பிரதி நிதித்துவம் சம்பந்தமான கோரிக்கைகளை அவர்கள் முன் வைத்தனர். அந்தச் சூழ்நிலையில் போராளிப் பெண்கள் கடுமையான தாக்குதல்க ளுக்கும் உட்பட்டனர்.இவ்வாறு உழைக்கும் பெண்கள் பல்வேறு துன்பங் களுக்கும் கொடுமைகளுக்கும் அநீதிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி இருந்தது. அதனாற் தொடர்ந்தும், நீதிக்காகக் குரல் தொடுத்தனர். அதன் பின்னர் 1909ம் ஆண்டு அமெரிக்க சோஷலிசக் கட்சி மார்ச் 8ந் திகதியை பெண்கள் தினமாக அறிவித்தது. இதனை 'சர்வதேச மகளிர் தினம்' எனப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று தொடர்ந்தும் பெண்கள் போராடினர். மேலும் 1910ம் ஆண்டு டென்மார்க்கின் 'கோபன்ஹெகன்' நகரில் 17 நாடுகளைச் சேர்ந்த நூறு பெண்கள் ஒன்றிணைந்து, கலந்து கொண்டு மாநாடு நடத்தினர். இம்மாநாட்டில் ஜெர்மனியைச் சேர்ந்த கிளாரா ஜெட்கின் எனும் பெண்மணி சர்வதேச மகளிர் தினம் பற்றிய கருத்தினை முன் வைத்து வலியுறுத்தினார் .அதனை அடுத்து, 1911ல் ஆஸ்திரியா, டென்மார்க் ஜேர்மனி சுவிட்ஸலாந்து போன்ற நாடுகளில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இதனைக் கருத்திற் கொண்டே 2011ம் ஆண்டு மகளிர் தின நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்டது என்பதும் வரலாறுதான்.

என்றாலும், 1917ம் ஆண்டு ஏற்பட்ட ரஷ்யப் புரட்சியின் போது, அதிகளவான பெண்கள் சுமார் நான்கு நாட்களாகப் போராட்டம் நடத்தினர். பல்வேறு இன்னல்களைச் சந்தித்தனர். இப்போராட்டத்தில் பெண்கள், எங்களுக்கு அமைதியும் உணவும் வேண்டும்! என்ற தொனிப் பொருளை முன் வைத்தனர். இப்போராட்டத்தின் போது அன்றைய ரஷ்ய மன்னர் ட்ஸார் என்பவர் பதவியிழந்தார்.

அனைத்துலக நாடுகளிலும் உள்ள பெண்களின் உரிமைகளை உறுதி செய்யவும், பாலின சமத்துவத்தைப் பேணவும் சர்வதேச மகளிர் தினமாக மார்ச் எட்டாந் திகதியை பிரகடனப்படுத்த 1921ல் மீண்டும் மாஸ்கோவில் ஒன்று கூடினர். இவ்வாறு தொடர்ந்து உரிமைப் போராட்டம் நடத்திய மனவலிமை மிக்க உழைக்கும் மங்கை யர்க்கு ஐக்கிய நாடுகள் சபை 1975ம் ஆண்டு தான் சர்வதேச மகளிர் தினமாக மார்ச் 8ம் திகதியை அறிவித்தது.

*பெண்களுக்குத் தொழில் புரியும் இடங்களில் மாத்திரமன்றி சமூகத் திலும் பெரும் அடக்குமுறைகள் அவனியில் ஆயிரமாய், இன்றும் இருக்கின்றனதானே.*

*உடலளவில் மென்மையும் உள்ளத்தளவில் வலிமையும் மிக்க மங்கையரை, 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று சொல்லிக், கல்வி கற்கும் உரிமையைக் கூட மறுத்தனர்.ஏட்டினைப் பெண்கள் தொடுவதும் தீமை என்று கூறி, வீட்டிலே பெண்களைப் பூட்டி வைத்தனர்' என்றார் பாரதி.*

*தாலிக்கொடி உறவுக்காகத் தொப்புள் கொடியுறவுகளை அறுத்து வைத்தனர். வீடு வாசல் பெருக்கி, கணவனின் தேவைகளைப் பூர்த்தி செய்து, பிள்ளை களை வளர்த்திட மட்டுமே பெண்கள் பிறக்கின்றனர் என்பது போலவே நடத்தினர்.*

*இளவயதில் திருமணம் செய்து வைத்தனர். எதிர்பாராவிதத்தில் இளவயதுக் கணவன் இறந்து விட்டால், எரியும் கணவனின் சிதையிலே இளவயது மனைவியையும் தூக்கிப் போட்டு விட்டு உடன் கட்டை ஏறியதாக உரைத்தனர். கணவனை இழந்த காரிகையரைக் கண்டாலே, பட்ட மரமென்பார்; பொட்டெல்லாம் எதற்கென்பார்; பூவெல்லாம் கழற்று என்பார்; கேவலமாய்ப் பேசி மனதினை உடைத்திடுவார்' என்று பல பாக்களிலே,*

*இவ்வாறான கொடுமைகளை அன்று எதிர்த்துப் பாடினார் பாரதியார்.*

*'மாதர் தம்மை இழிவு படுத்தும் மடமையைக் கொளுத்துவோம்' என்று வெகுண்டெழுந்தார் அவர்.*

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் இயற்றுவதும்**
**பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்**
**என்றுரைத்த எட்டய புரத்து எழுச்சிக் கவிஞர் பாரதி.**
**'நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்,**
**நிலத்தில் யார்க்குமஞ்சா நெறிகளும்,**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்,**
**செம்மை மாந்தர் திறம்புவதில்லை'**

*என்றுரைத்துப் பெண்களை ஞானம் பெற்றுச் செருக்குடன் செம்மை பெறத் தூண்டினார் அவர். சமுதாய வண்டியின் இரு சக்கரங்களான ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டு அறிவினைத் தேடிடும் போதிலே தான் அகிலம் சிறந்திடும் என்றால், அது மிகையாகாது தானே!*

*இவ்வாறான போராட்டங்களோடு கல்விக்கனியைச் சுவைத்த சாதனைப் பெண்களின் பட்டியல் இன்று நீண்டு கொண்டே செல்கிறது. அறிவியற் துறையில் இருமுறை நோபல் பரிசு பெற்றார் மேரிகியூரி அம்மையார். விண்வெளிப் பறவையெனும் புகழ் பெற்றார் கல்பனாச் சௌலா. மற்றும் இந்திராகாந்தி, அன்னை தெரெசா என எண்ணற்ற சாதனைப் பெண்மணிகளான பொன்மணிகள், உலகில் ஒளி வீசி வாழ்ந்து மறைந்தனர்.*

உலகின் முதல் பெண் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், முதல் பெண் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்காவும் நம் தாய்த் திருநாட்டின் பெண்மணிகளே!

பெண்ணுரிமைகள் பல பெற்று விட்ட இன்றைய உலகின் பெண்கள், கடல் கடந்து சென்று கூடக்கல்வியறிவைப் பெருமையுடன் பெற்றுக் கொள்கின்றனர்.

இன்று நம் மங்கையர்கள் கல்வியிலே வென்று மாண்புடன் மருத்து வத்துறை பொறியியற் துறை டிஜிட்டல் தொழில் நுட்பத்துறை, மற்றும் கணனித்துறை காவல்துறை நீதித்துறை நிர்வாகத்துறை என்றும் விஞ்ஞானத் தொழிநுட்ப ஆய்வுகள் விண்வெளிஆய்வு, மற்றும் அரசியல் பொருளாதாரத் துறையென அத்தனை துறைகளிலும் கொடி கட் டிப் பறக்கின்றனர். இன்றைய உலகின் 190 நாடுகளில் (17)பதினேழு நாடுக ளிற் பெண்கள், தலைமைத்துவம் தாங்கிப் பணிபுரிகின்றனர். மேலும் பொது வர்த்தக வாரியங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்படும் காலமிது. இன்றைய இலங்கை நாட்டில் மலையகப் பெருந்தோட்டத் தொழில் மூலமும் பெண்கள் அந்நிய செலாவணியை ஈட்டித் தருகின்றனர். மேலும் பெருமளவான பெண்கள் வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்றும் வெளிநாட்டு வருமானத்தைப் பெற்றுத் தருகின்றனர்.

ஆகவே, தோல்விகளைக் கண்டு துவளாமல், முயன்று முகங்கொடுத்து வென்று சாதனைத் தாரகைகளாய் எம் பெண்மணிகள் இன்றும் மின்னிக் கொண்டிருக்கின்றனர் என்பதும் உண்மை தான்!

விபத்தில் விழுந்து எழுந்து, முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்டு மாற்றுத் திறனாளியாகி விட்ட ப்ரீத்தி ஸ்ரீனிவாசன் எனும் மங்கை இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு இல்லம் ஒன்றை நடாத்தி வருகிறார்.

அண்மையில் அந்தச் சாதனைப் பெண் ப்ரீத்தி ஸ்ரீனிவாசன் அவர் களுக்கு, இந்திய அரசினால் ‘கல்பனாச் செளலா விருது’ வழங்கிக் கௌர விக்கப் பட்டது.

அத்துடன் எமது இஸ்லாமிய சமூகத்தின் பேரறிஞர்களான மர்ஹூம் அல்லாமா யூசுப் கர்ளாவி மற்றும் அஷ்ஷேய்க் ராசிக் கன்னுஷி போன் றோர் தங்களின் புதல்விகளை அறிவியற் துறைகளில் ஒளி வீசிட அனுமதி அளித்திருந்தனர்.

அல்லாமா யூசுப் கர்ளாவி அவர்களின் புத்திரியான இல்ஹாம் கர்ளாவி இன்று அணுத்துறைப் பேராசிரியராகப் பணி புரிகின்றார். இன்னொரு மகள் ஷிஹாம் கர்ளாவி பௌதீகத் துறையில் பேராசிரியராக விளங்குகிறார். அஷ்ஷேய்க் கன்னுஷியின் புதல்விகளான யுஷ்ரா கன் னுஷி,சுமைய்யா கன்னுஷி ஆகிய இருவரும் அறிவியல் துறையினில் கொடிகட்டிப் பறக்கின்றனர்.

எண்ணிலடங்காப் பெண்மணிகள் இன்றும், நிமிர்ந்த நன்னடத்தை களுடன் பொறுமை தியாகம், துணிச்சல், விடாமுயற்சி எனும் பண்புகள் கொண்டுழைத்து அகிலத்தில் அரும்பணி ஆற்றுகின்றனர்! எனவே வரைமுறை தாண்டாது, வையகத்தில் மங்கையரும் மகத்துவமிக்க நற்பணி ஆற்றலாம் என்பதற்கு இச்சாதனைகள் சான்றாகும் என்றால் மிகையாகாது.

இன்னும்,கண்ணிய உடையில் கல்லூரி சென்ற கன்னியவள் அஞ்சாது உடைக்கான உரிமையை உரத்துக் கூறி வென்ற சம்பவமும் இன்றுண்டு.

பெண்ணை மதிப்பவர்களிடம் மலராய் மென்மையுடனும் நடந்து கொள்ளவும், பெண்ணை மிதிப்பவரிடம் முள்ளாக நடந்திடவும் நங்கையர் துணிந்திட வேண்டுமல்லவா?

எது எப்படியிருப்பினும்,

இன்றும், பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டு தான் இருக்கின்றன என்றால் மிகையாகாது.

ஆறு வயதுச் சிறுமி முதல் அறுபது வயதுப் பாட்டிவரை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுவதை இன்றும் தடுக்க முடியாதுள்ளமை துரதிஷ்டமே! எனவே எந்த வகையிலும் இன்றும் நமது பெண்களுக்குப் பூரண பாதுகாப்பில்லை என்று கூறுவதில் தப்பில்லை தான். இன்றைய போதைவஸ்துப் பாவனையும் இதற்கொரு காரணமாகலாம்.

அது மட்டுமன்றி,இன்றும் பெண்கள் தொழில் புரியும் இடங்களில் பாலியல் லஞ்சம் கேட்டல், அதிகாரிகளின் துன்புறுத்தல்கள், மேலதிகப் பணிச்சுமை, உழைப்புக்கேற்ற ஊதியமின்மை போன்ற வதைகள் வனிதையருக்கு உண்டு தான்.

அத்தோடு கட்டாயத் திருமணம், இளவயதுத் திருமணம் என்று அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், கணவனின் அட்டகாசங்கள், குடும்ப அடக்குமுறைகள், சீதனப் பிரச்சினைகள் போன்ற கொடுமைகள் தாங்கமுடியாமல் தற்கொலை புரிந்திடும் அளவுக்கு இன்று பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. அத்தோடு, பிழையான தொலைத்தொடர்பாடல்களினாலும் இன்றைய பெண்ணினம் சீரழிவதை நாம் கண்டு கொண்டு தான் இருக்கின்றோம்.

எனவே மகளிர் தினம் கொண்டாடிப் பெருமைப்பட்டுப் பேசிக் கொண்டு இருக்கும் நாம், பறிக்கப் படும் உரிமைகளை வென்றெடுக்கவும் வேண்டுமல்லவா!

அத்தோடு பெண்ணுரிமை வென்று விட்டோம் என்று, இன்றைய நாகரிக நங்கையரும் வன்கொடுமைகள் நடந்திடாமல் தடுக்கச் சில வரைமுறைகள் தாண்டாது இருத்தலும் நலம் பயக்கும்.

அந்நிய ஆடவர்களுடன் தனிமையான சந்திப்புக்களில் ஈடுபடல், பெண் சுதந்திரம் என்றெண்ணிக் கொண்டு அவர்களுடன் கொஞ்சிக் குலாவுதல்,

ஆண் வேறு நான் வேறா? என நடந்து கொள்ளல், மற்றும் ஆடைக் குறைப்பு, கவர்ச்சியை மேம்படுத்தல், தனிமைப் பயணங்கள் போன்ற வற்றைத் தவிர்த்தல் போன்றன பெண்மணிகளுக்கு அவசியமல்லவா.

எனவே 'உலகின் கண்கள்' என்று விளிக்கப்படும் பெண்களின் மகிமைகளைப் போற்றிக் காத்திட நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்.

**கிண்ணியா சபீனா**
ஓய்வுபெற்ற உதவி அதிபர்
கிண்ணியா

---

# காதலெனும் பெருங்கடல்..!



**சூர்யா பா.**

என் இனியவளே ..! என்னவளே ..!
அனுதினம் உனக்காக
காத்திருப்பதே சுகம்
உன்னை மட்டுமே எண்ணி ஏங்கி
தவிப்பதில் ஆர்ப்பரிப்பான சுகம்

கன்னியவள் கடைக்கண்
பார்வையிலே
பல்லாயிரம்
கதைகள் சொல்கிறாள் .
என்னவளின் விழிகள் பார்ப்பதற்கே
என் விழி இமைக்க மறந்து
விடிய விடிய காத்து நிற்கிறேன் .

இனியவளை பார்த்தே
பூரித்து போகிறேன்.
வார்த்தைகள் ஒன்றும்
பேசாமலே
விரும்பிய வாழ்க்கையை
கனவில் வாழ்கிறேன்
உன்னோடு.

இதயத்தை கொள்ளை -
கொண்டவளே!
என்னவளே!
தடுமாறி தடம் மாறினேன்
தவமாய் உன்னை பொத்தி வைத்தே
காதல் வளர்த்தேன் நீயும் அறியாமல்..

விரும்பியவளை விட்டுக்கொடுக்க
மனமில்லை!
விரும்பி போக திக்கு திசை
தெரியவில்லை..!
தொட்டணைக்கும் நேரத்திலே
தொடுவானமாய் போனவளே!

உன்னில் என்னை தொலைத்து
நித்தம் என்னை தேடும் மடமையடி.
நீ சொந்தமின்றி போனாலும்
உன் நினைவுகள் என்றும்
எனக்கு மட்டுமே சொந்தமடி ..

# நான் காணும் உலகம்

விழித்திரையில் விநோதமிடுபவை
கண்காணாத் தொலைவில்
கதகளியாடுபவை என
எத்தனையோ இடம்பெற்றுக்
கொண்டேதான்
நான் காணும் உலகில்

விடாமுயற்சியில் ஒரு குலத்தினர்
வீண் பயிற்சியில் பல தரத்தினர்
இன்னும் உறவுகளை இழந்தும்
இழக்காததுமாய் பல்வகையினர்
நான் காணும் உலகில்

கண்டதையெல்லாம் கற்றுக்கொள்ள
போராட்டங்கள் அரங்கேறுவதும்
இருப்பதையே முழுமைப்
படுத்தாமல் வாழ்வோரும் நான்
காணும் உலகில் தான்

அச்சமில்லை உச்சம் தொட
உடம்பிருந்தும் உழைக்காமல்
கரம் ஏந்திடும் வர்க்கத்தினரும்
நான் காணும் உலகில் தான்

பட்டாளம் சொத்திருந்தும்
பங்கு வைத்திட மனமில்லை
மேதினியோர் மீண்டெழ புதுப்
பிறவி தான் பிறந்திடனும்
நான் காணும் உலகில்

கவிச்சாரல்
**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
(இஸ்லாஹி)
புல்மோட்டை

# வாருங்கள் மங்கையரே

வாழ்க்கை என்பது
வாழும் வரை மட்டுமல்ல
நாம் மறைந்த பின்பும்
நாளும் பேசப்படவேண்டும்

உலகம் தூரமல்ல
உனதான கரங்களிலுண்டு
தேடலில் அடைந்துக் கொள்வதால்
தேசியமும் உன்னை நேசிக்கும்.

மங்கையரே உதவாக்
கரையல்ல நீங்கள்
மாசற்ற மல்லிகைப்பூ
இல்லங்களின் இதயம்
இன்பக்காற்று உங்களால் வீசும்

நல்லப்பெண் நாளும்
நாடும் நம்வீட்டை
அந்நாள் வரை நித்தம்
அர்ப்பணிப்பில் தொடரும் அவள்பணி

மங்கையரே விழித்திடுங்கள்!
மகிமை பல காத்திருக்கு
பொறுமையோடு பெற்றிடுவோம்
பெருமைகள் வந்துசேரும்

உன் குடும்பம் உனக்கானது
உன்னிலிருந்து விழிக்க வை
போராட்டங்கள் அகற்றி
பொறுமையாய் சாதிப்பாய்

சாதனைகள் வேதனைகளை அகற்றும்
வாழும் வரை தேடு
வெற்றி நிச்சயம் தொடர்ந்து செல்!

**எஸ்.யூ.கமர்ஜான்பீபீ** (J.P)
வத்தளை



# வெண்டி

**மு.ஹ. முர்ஷிதா ஷிரீன்**
விவசாய போதனாசிரியர் ( ஏறாவூர் ), சம்மாந்துறை, இலங்கை.

Abelmosclus esculantus (எபெல் மொனஸ்ஜஸ் எஸ்கியுலாண்டஸ்) எனப்படும் மல்வேசி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பயிராகும்.

இலங்கையில் மலைநாட்டு ஈர வலயத்தைத் தவிர ஏனைய பிரதேசங்களில் இதனை வெற்றிகரமாக செய்கை பண்ணலாம்.

இலகுவாக செய்கை பண்ணி வருடம் முழுவதும் அறுவடை செய்ய முடியுமாதலால் பெரும்பாலான விவசாயிகளிடையே பிரபல்யமடைந்துள்ளது.

இலங்கையில் இளம்காய்களே மரக்கறியாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இந்தியாவிலும் ஆபிரிக்க நாடுகளிலும் இலைகளும் பிரபல்யானமானதொரு மரக்கறியாகும்.

பல்வேறு வகையில் சமைக்கலாம். அதன் போசணைக் குணங்களிற்காகவும் நுகர்வோரிடையே பிரபலமானதாகும்.

### அனுகூலம்

இளம் காய்களில் புரதம், நார்ப் பொருட்கள், கனிப் பொருட்கள், கொழுப்பு, விற்றமின்கள் என்பன உள்ளன.

இதில் அதிகளவில் கல்சியம், அயடீன் காணப்படுகின்றன.

எனவே அயடீன் குறைபாட்டால் ஏற்படும் கழலை நோயை தவிர்க்க முடியும்.

### மண்

அமிலம் அல்லது காரம் இல்லாத சிறந்த நீர் வடிப்புள்ள மண் ஆரோக்கியமான சிறந்த பயிர் வளர்ச்சிக்கு உதவும்.

### சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள்

### MI - 5

உலர் வலயத்தில் கால போகத்திலும் ஏனைய பிரதேசங்களில் இரு போகங்களிலும் செய்கை பண்ண உகந்தது.

காய்கள் இளம் பச்சை நிறமானது.

இது சித்திர வடிவ வைரசு நோயால் பாதிக்கப்படும்.

55-60 நாட்களில் முதலாவது அறுவடையை பெறலாம்.

### MI - 07

உலர் வலயத்தில் சிறு போகத்திலும் ஏனைய பிரதேசங்களில் இரு

போகங்களிலும் இதனை செய்கை பண்ணலாம்.

காய்கள் இளம் மஞ்சள் நிறமானவை.

இவ்வர்க்கம் மஞ்சள் சித்திர வடிவ வைரசு நோயால் பாதிக்கப் படும்.

55-60 நாட்களின் முதலாவது தடவை அறுவடை செய்யலாம்.

**ஹரித்த:**

ஈர வலயத்தை விட உலர் வலயத்தில் சிறந்த வளர்ச்சியை கொண்டிருக்கும்.

கால போகம், சிறுபோகம் இரண்டிலும் செய்கை பண்ண இவ்வர்க்கம் மிகவும் உகந்தது.

காய்கள் பச்சை நிறமானவை .

சித்திர வடிவ வைரஸ் நோயை தாங்கி வளரக் கூடியது.

50 நாட்களில் முதலாவது அறுவடையை பெறலாம்.

**ஏனைய வர்க்கங்கள்:**

பால் வெண்டி, சிவப்பு வெண்டி என காணப்படுகிறது.

இதில் பால் வெண்டி சகித்து வளரக் கூடியதும் இரு போகத்திற்கும் பொருத்தமானதாகும்.

**சிவப்பு வெண்டி:**

உயரமாக வளரக் கூடியதும் நீண்ட நாட்கள் வாழக் கூடியதும் ஆகும்.

**தேவையான விதை:**

ஹெக்டர் ஒன்றிற்கு 4.5kg தேவையாகும்.

**நடுகைக் காலம்:**

சிறு போகத்தில் ஏப்ரல் முதல் மே முதற் பகுதி வரையும் கால போகத்தில் செப்டம்பர் ஆரம்பத்தில் இருந்து ஒக்டோபர் ஆரம்ப காலம் வரை நடுகை செய்யலாம்.

**நடுகை இடைவெளி**

1. வரிசைகளுக்கு இடையே 90 * 60 * 30 cm நீள, அகல, ஆழம் கொண்ட நடுகை குழிகளை அமைத்து உக்கிய கூட்டெரு, சாணம் போன்றவற்றால் நிரப்பிய பின் விதைகளை நடல் வேண்டும்.
2. ஒரு குழியில் ஒன்றுக்கொன்று சற்று இடைவெளி இருக்கத் தக்கவாறு 3-4 விதைகளை நடவும்.
3. வெண்டியை விரைவாகவும் சீராகவும் முளைக்கச் செய்வதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன் விதைகளை நீரில் ஊற விட வேண்டும்.
4. விதைகளை நட்டு 2 வாரங்களின் பின் நடுகை குழி ஒன்றில் ஆரோக்கியமான வீரியமான 2 நாற்றுகளை மீதமாக விட்டு ஏனையவற்றை பிடுங்கி விடவும்.

**களைக் கட்டுப்பாடு:**

விதைகளை நடுகை செய்து 2-4 வாரங்களுக்கும் பூக்கும் சமயத்திலும் களை இல்லாது பராமரிப்பது மிக அவசியமாகும்.

**பசளை பிரயோகம்:**

பசளை இடல் (kg / ha)

யூரியா TSP. MOP

அடிக்கட்டு பசளை

100. - 200 - 50

விதை முளைத்து

100 - 50

4 வது வாரம்

விதை முளைத்து

100 - 50

8 வது வாரம்

**பீடைகளை கட்டுப்படுத்தல்:**

**இலைத் தத்தி :**

இதன் தாக்கம் 2 - 3 கிழமைகள்

வேப்பெண்ணெய் கரைசல் அல்லது 3 G கரைசல் பயன்படுத்தலாம்.

தாக்கம் அதிகமாகும் போது இரசாயன பீடை நாசினியினை பயன்படுத்தி இதனை கட்டுப் படுத்தலாம்.

**தண்டு காய் துளைப்பான்:**

இளம் தாவரங்களின் தண்டினை துளைத்து சேதம் விளை விப்பதோடு காய்களில் துளைகளை ஏற்படுத்தும்.

வேப்பெண்ணெய் கரைசல் பயன் படுத்தலாம்.

தாக்கம் அதிகமாயின் இர சாயன பீடை நாசினியை பயன்ப டுத்தலாம்.

**இலைப் பின்னி:**

இலைகள் உதிரும். இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட இலை களை பிடுங்கி அழிக்க வேண்டும்.

3 G கரைசல் பயன்படுத்தலாம்.

தாக்கம் அதிகமாயின சிபாரிசு செய்யப்பட்ட பூச்சி நாசினியை பயன்படுத்தலாம்.

**நோய்கள்:**

1. சித்திர வடிவ வைரசு நோய்:

பயிரின் ஆரம்ப வளர்ச்சி பருவத்தில் நோய் ஏற்படுமாயின் விளைச்சல் 80% வரை குறைவடையும்.

இதை தவிர்ப்பதற்கு மாற்று மருந்து வழங்கிகள் ஆன களைகளை கட்டுப்படுத்தல்.

நோயால் பாதிக்கப்பட்ட தாவ ரங்களை பிடுங்கி அழித்தல்.

சிபாரிசு செய்யப்பட்ட காலத் தில் நடுகை செய்தல்.

எதிர்ப்பு இனங்களை நடல்.

2. **தூள் பூஞ்சண நோய்:**

இலையின் மேற்பரப்பில் கூட்டம் கூட்டமாக வெண்ணிற புள்ளி களை காணலாம்.

நோய் தீவிரமாக இருப்பின் எதாவது ஒரு பங்கசு நாசினியை சிபாரிசு செய்யப்பட்ட அளவில் விசிறவும்.

**அறுவடை :**

45 நாட்கள் முதல் 100 நாட்கள் வரை காய்களை அறுவடை செய் யலாம்.

இளம் காய்களை அறுவடை செய்யவும்.

தரமான காய்களுக்கு ஒன்று விட்ட ஒரு நாளில் காய்களை அறுவடை செய்யலாம்.


**விளைச்சல்:**

காலநிலை வலயம், போகம், வர்க்கம் என்பனவற்றிற்கு ஏற்ப விளைச்சலில் அளவு வேறுபடும்.

பொதுவாக ஹெக்டேர் ஒன்றில் இருந்து 10-15 மெ.தொன் வரை விளைச்சலை பெறலாம்.

## நூல் விமர்சனம்

# வாசனைப்பூக்கள்



கவிதை பூவுலகம் காணும் ஈழத்துக் கவிப்படைப் பாளர்களுள் புதிதாய் பூத்த மொட்டாக மெல்ல மலர்ந்து, மணம் வீசும் வாசனைப் பூவாக நாவலப்பிட்டி தந்த இளம் கவிஞர் ஷியாஸ்னா பைஸலும் இணைந்து கவி மணம் பரப்பிக் கொண்டிருக்கிறார்.

கன்னி முயற்சியான நூல் வெளியீடு ஒரு பிரசவத் துக்கு சமமானது என்பார்கள்.

துரிதகதியில் ரசித்து வாசித்து மகிழும் நம் போன்ற வாசகர்களுக்காக, நீண்ட நாள் கண்ணிலும் மனதிலும் சிறைபிடிக்கும் எண்ணங்களை வண் ணங்களாக்கி நம் கைகளிலே அழகிய வண்ணப் பூக்களாக, தனது கன்னி மலரை தவழச்செய்து இருக்கிறார் நம் கவிஞர் ஷியாஸ்னா பைஸல்.

வாசனைப் பூக்கள் என்னும் கவிதை தொகுப்பின் முதல் கவிதையும், இரண்டாவது கவிதையும் அவரின் நூலின் பெயரோடு ஒத்துள்ள பாங்கு உணர்ந்து மகிழத் தக்கதாகும்.

**'எழுத்துக்களில் வர்ணனை கோர்த்து, வார்த்தைகளை வசப்படுத்தி, பேனா முனை மை கொண்டு, வாசனை பூக்களினூடே கவிதைகளை பதிய வைத்துள்ளேன்'.** என அவர் ஆரம்பித்து இருக்கும் அழகே உள்ளே நுழைந்து மற்ற கவிதைகளையும் படிக்கத் தூண்டுகிறது.

பூக்கள், ரோஜா ,மழை என்ற ஆரம்ப கவிதைகளும் இயற்கையோடு ஆரம் பித்து, இயற்கையோடு பாடி முடித்திருக்கும் அழகு நம்மை ஈர்த்து விடுகின்றன.

தொடர்ந்து பெண், நட்பு, பெண்ணுரிமை என உண்மையின் படப் பிடிப்புக் கவிதைகளாக நம் மனதை நெருட செய்வதோடு, அவருடைய உளப்பாங்கையும் நமக்கு உள்ளபடி தெளிவு படுத்துகின்றன. பெண் உரிமை என்னும் கவிதையிலே

அந்தக்காலம் தாவணி கட்டிய பின்
பத்தாம் வகுப்பிலே பரிசம் போடுவதும்
படிக்காத எவனோ பிடிக்காத
எவனோ பூம்பூம் மாடாய் கழுத்தை நீட்டுவதும்
என்ன கொடுமை மானிடரே

என அங்கலாய்க்கிறார்.

*அந்தக் காலம் என்ன? இந்தக் காலத்திலும் தொடரும் பெண்ணின் திருமண நிலையை அன்னைத் தமிழில், அற்புத கவிதை அழகாய் படைத்திருக்கிறார் நம் கவிஞர்.*

*அடுத்து குரைஷா உம்மா என்ற கவிதையை பார்த்தவுடன், யார் அந்த குரைஷா உம்மா?? என யோசிக்கையிலே, தாய், மகள், இன்னும் எத்த னையோ எத்தனையோ பெண்கள் வடிவிலே பல குறைஷா உம்மாக்கள் நம் கண் முன்னே தெரிகிறார்கள்.*

**வென்றிடுவோம், என்னவள், நீ நீயாக இரு, நிலா** *என சின்ன சின்ன தலைப்புகளில் 17 கவிதைகள் அனைவரும் வாசிக்கத்தக்கதான மொழி நடையில் தனக்கே உரிய பாணியில் அழகாக பதிவு செய்திருக்கிறார்.*

*ஒவ்வொரு வரிகளிலும் உரிமையும் பாசமும் தான் மேலோங்கி இருக்கின்றன.*

*தற்காலங்களில் கை கொடுப்பதிலும் தட்டிக் கொடுப்பதிலும் இரத்த உறவையும் மிஞ்சிய நட்புக்களே அதிகம் என்பதை நட்பு என்னும் கவிதை உணர்த்தி நிற்கிறது.*

*நெஞ்சைத் தொடும் வரிகளாக,*

*ஒவ்வொரு ஆத்மாவும் மரணம் எனும் பானத்தை சுவைத்தே தீரும். என்ற உண்மை மூலம் மண்ணறை வாழ்வை மறந்து விடலாகாது என மரணம் கவிதை தெளிவுபடுத்துகிறது.*

*மனதில் தோன்றிய உணர்வுகளை கோர்த்து வார்த்தைகளை வரிகளாக்கி ஆழமான அர்த்தத்துடன் சொற்கள் கலந்து யாத்திருக்கும் குட்டிக்குட்டி கவிதைகள் நம்மை ஈர்த்து தான் விடுகின்றன.*

*இலகு நடை, அழகு தமிழ் நூல் முழுக்க விரவிக் கிடக்கின்றது. நூலின் பிற்பகுதியில் இயற்கையுடன் சங்கமித்துள்ள துளிப்பாக்கள் மனதுக்கு விருந்தளித்து செல்கின்றன. படங்களுடன் ஒவ்வொரு கவி தைகளும் சிறுவர்களும் விரும்பி வாசிக்கும் ஆர்வத்தை தூண்டுவதாய் அமைந்துள்ளது.*

*அழகிய அட்டைப் படத்துடன் கைக்கடக்கமான இந்த 'வாசனைப் பூக்கள்' கவிதை நூல் ஒரே பார்வையில் வாசித்து முடிக்க கூடியவாறு அமைந்திருக்கின்றது.*

*வாசனைப்பூக்கள் மூலம் இலக்கிய உலகில் இணைந்த இக்கவிஞர் சியாஸ்னா பைஸல் மேலும் பல சிறந்த இலக்கியங்களை படைத்து இலக்கிய பிரியர்களுக்கான விருந்து படைத்து விருதுகளும் பல பெற்றிட வாழ்த்துவோம்.*

**ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன் -** கிண்ணியா

# அவள் எங்கிருந்து முளைப்பாள்



நிமிர்ந்த நன்னடை
நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சா நெறிகள்
திமிர்ந்த ஞானச்செருக்கு
இத்தனையும் தேடினான்
என் தந்தை பாரதி
இவளைத்தான் தேடினான்

பிறந்தார்கள் பேதையர்கள்
பாரதி பெயர் சொல்ல
பேதமின்றிப் பிறந்தார்கள்
ஆனால், ஏற்றுக்கொண்டதா சமூகம்
அவளை அப்படியே
ஏற்றுக்கொண்டதா ?

திமிர் பிடித்தவள் அதிகம் பேசுகிறாள்
அடக்கி வையுங்கள் அவளை
முடக்கி மூலையில்
தள்ளுங்கள் என்றது

மீறியும் எழுந்தாள் திறமான மாது
திணறியே எழுந்தாள்
நடத்தையில் பிழை கண்டது
நாலு சுவற்றுக்குள்ளே
இரு என்றது

எப்படிப் பிறப்பாள் என் தந்தையே
நீ கண்டவள்
எங்கிருந்து முளைப்பாள்
இருந்தாலும் எழுதுகிறேன்
இருட்டறையில் மின்மினிபோல்
முணுமுணுத்துப் புலம்புகிறேன்

பெண்ணே !அறிவைக் கொண்டு
அச்சங்கொள்ள வை
வெட்கம் கொண்டு
விலகிச் செல்லாதே
வீரங்கொண்டு
வியர்த்துப் போக வை
மௌனங்கொண்டு
மடங்கிப் போகாதே
பேச்சைக் கொண்டு பிரமிக்கவை

அதட்டல் கண்டு அடங்கிப் போகாதே
ஆற்றல் கொண்டு அதிர்ந்து போக வை
பொறுமை கொண்டு
புண்ணாய்ப் போகாதே
திறமை கொண்டு
திகைத்து நிற்க வை
பணிவைக் கொண்டு
பயந்து போகாதே

துணிவைக் கொண்டு
துக்கத்தை துவைத்துப் போடு
மென்மையைக் கொண்டு
மலிந்து போகாதே
தன்னம்பிக்கை கொண்டு
தலைசிறந்து வாழ்
என்ன செய்ய முடியும் என்று
செயலற்றுப் போகாதே
எதையும் செய்ய முடியும்
என்று கர்வம் கொள்

**கவிமகளின்**
**ஜெயவதி**

# புயலாகும் தென்றல்



**ஷிபானா fபதா**

எப்படியாவது பஸ்ஸை பிடித்து விட வேண்டுமென்று பதற்றத்துடன் ஓட்டமும், நடையுமாக வந்து கொண்டிருந்தாள் யாழினி.

முச்சந்தியை கடந்து திரும்புகையில் அவளைக் கடந்து சென்றது பஸ். அத்தனை வேகமில்லாமல் நிறைமாதக் கர்ப்பிணியைப் போல் நகர்ந்தாலும் அவளைத் தாண்டி சென்றதும் சற்று சலிப்படைந்து அப்படியே நின்று விட்டாள். சிறிது தூரம் சென்ற பேருந்து சடுதியாய் நின்று அவளுக்கொரு எதிர்பார்ப்பைக் கொடுத்தது

ஓடிப்போய் ஏறிக்கொண்டாள். அப்பாடா...

என்று ஒரு பெருமூச்சு விடுவதற்குக் கூட முடியாதளவு வழமை போலவே பயணிகளால் பேருந்து நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

மாலையில் வீடு திரும்புகையில் பஸ்ஸினுள் வியர்வை, சாராய வாடை என பலதரப்பட்ட துர்நாற்றங்களின் கலவையோடு இறங்கும் வரை ஒருவித அருவருப்போடும், குமட்டலோடுமே வர வேண்டியுள்ளது. ஆனால், காலை நேர பேருந்து அப்படியல்ல நல்ல நறுமணங்களும், அயன் செய்த ஆடைகளும், குளித்த ஈரம் சொட்டும் கூந்தல்களும்... விதி விலக்காக சிலர் முன்னைய நாள் உடுத்த அதே வியர்வை வாடை ஆடைகளுடன்.

மிதிபலகையிலிருந்து மெதுவாக முன்னேறி உள் சென்ற யாழினி தனது உணவுப் பையை இருக்கையில் இருந்த ஒருவரிடம் கொடுத்தாள். அவரும் ஒரு சிநேக புன்னகையுடன் அதை வாங்கி மடியில் வைத்துக் கொண்டார். நல்லவர்களும் இருக்கிறார்கள் என்று மனதினுள் மகிழ்ந்துக் கொண்டாள். யாழினியின் முதுகுப் பக்கம் சாய்ந்து கொண்டிருந்த ஒருவன் சிறிது நேரத்தில் அவளின் தோற

பட்டைக்கு மேலால் தலையை சொருகிக் கொண்டான். அவள் கோபமாய்த் தரும்பிப் பார்க்கையில் அவனும் பின்னால் உள்ளவர்களை பார்ப்பது போல் பாசாங்கு செய் தான். இன்னொருவன் பக்க வாட்டில், விடிய விடிய முழித்தி ருந்தவனை போல் அவள் மேல் தூங்கித் தூங்கி விழுந்தான் முடி யுமான நேரங்களில் எல்லாம் முழங்கைகளால் குத்தி வைத்தாள் அவர்களுக்கேயில்லாத மாதிரி நிற் பதைக் காணுகையில் எரிச்சல் எரிச் சலாய் வந்தது.

'உரசரதுக்கென்றே வருதுகள் மூதேவிகள்...'

முணுமுணுத்துக் கொண்டாள்.

சிறிது தூரம் செல்கையில் ஆட்கள் சிறிது சிறிதாக குறையத் தொடங்கினார்கள். அது அவளுக்கு சற்று நிம்மதியைக் கொடுத்தது. ஒரு வழியாய் இருக்கையைப் பிடித்து அமர்ந்து கொண்டாள். இப்பொழுது கொஞ்சம் காற்றோட் டமாய் இருந்தது. கைப்பையைத் திறந்து கைப்பேசியை எடுத்தவள் முகநூலை திறந்தாள்.

காலை வணக்கம், கவிதை, வாழ்த்துச் செய்திகள், நாட்டு நடப்புகள் போன்ற பதிவுகள் கண்களுக்கும், மனதுக்கும் சிறு உற்சாகத்தை கொடுத்தது. இந்த சமூக வலைத்தளங்கள் மனிதர்களை நாசமாக்குவதாகவே பெரும்பாலும் சொல்லப்படுகிறது. அதிலும் எத் தனை நல்ல விடயங்கள் உள்ளது. எவ்வளவு நல்ல வாய்ப்புகளை பெற்றுக் கொள்கிறோம். அவளை பொறுத்த வரை முகநூல் அவளுக்கு ஒரு முகவரியை கொடுத்தது. மட்டுப் படுத்தப்பட்ட அவள் உலகிற்கு சிறகுகளை கட்டி விட்டது. அவள் திறமைகளை வளர்த்துக் கொள் வதற்கு களமமைத்துக் கொடுத்தது.

வாய்ப்புக்கள் என்பது வரம் சிலருக்கு அது வாழ்வில் ஒரு முறை யேனும் கிடைக்கிறது. பலருக்கு வாய்ப்புக்கான வாய்ப்புகள் கூட கிடைப்பதில்லை.

தன் எண்ணங்களை, எழுத்துக் களை மக்களோடு பகிர்ந்து கொள் வதற்கு முகநூல் அவளுக்கு வாய்ப் பைக் கொடுத்தது. ஒரு குடும்பப் பெண் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள எத்தனை போராட வேண்டியுள்ளது. குழந்தைகள், கணவன், சமையல், வீட்டுவேலை, ஆபிஸ் வேலை என்று பார்த்துக் கொண்டு, தன் திறமைகளுக்கு உரமிட்டு தன்னை வளர்த்துக் கொள்வதற்கு எத் தனை சிரமப்படுகிறோம். சமூக வலைத்தளங்களில் தனக்கான வாய்ப் புகளைத் தேடிப் பிடித்து, தன்னை காத்துக் கொண்டு அதில் பயணிப்பது பெரும் சவால்தான். எல்லோரும் எண்ணுவது அவர்களுக்கென்று சுய விருப்பு, வெறுப்புகள் இல்லை என்று. எவ்வித உணர்வுகளும் இல்லை அவர்கள் குடும்பத்திற்கு உழைப் பதற்கென்றே பிறந்த ஜடங்கள் என்று. அவர்களுக்கும் தனிப்பட்ட ஒரு

வாழ்க்கை இருப்பதென்பதையே உணர்வதில்லை. வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு தனக்காக சிறிது நேரத்தை ஒதுக்கி கொண்டு கைப்பேசியைக் கையிலெடுத்தால் அப்பப்பா... எத்தனை குத்தல்களும், குடைச்சல்களும்.

டிங்...டிங்...டிங்... இந்த சத்தத்தை கேட்டாலே ஏனோ அவளுக்கு வெறுப்பும், அரு வருப்பும் ஒன்றாய் வந்துவிடுகிறது. இப்பொழுது தான் உள்பெட்டியை கவனித்தாள். அது நிறைந்து வழிந் துக் கொண்டிருந்தது. இருக்கிற கெடுபிடில இதுங்க தொல்ல வேற.

'இந்தா வந்துட்டாங்க வெட்டி பயலுங்க' என்று மனதுக்குள் ளேயே வெறுப்பை உமிழ்ந்துக் கொண்டாள்.

ஆயிரம் ஹாய், ஹலோக்களும், வணக்கம், வந்தனங்களும், சுகமா, சாப்டிங்களா, தூங்கினீங்களா, இத் யாதி... இத்யாதி...

சிலர் சலிப்படைந்து நிறுத்தி விடுவார்கள்.

வெட்கம் கெட்டதுகள் சில தொடர்ந்தும் முயற்சியை கை விடாமல் இருக்கும். சில

கேடு கெட்டதுகள் பொறு மையை இழந்து தேவையற்ற நட வடிக்கைகளிலும் ஈடுபட்டு தம்மை ஈனப்பிறவிகள் என்று பறைசாற்றிக் கொள்ளும்.

யாழினி அவைகளை ஒரு போதும் கண்டு கொள்வதேயில்லை, கணக்கெடுப்பதுமில்லை. அவைகளை புளொக் செய்துவிட்டு வேலையைப் பார்ப்பாள். என்றாலும் அவளுக்கு வரும் ஆத்திரத்திற்கு அவை களைப் பிடித்து வரிசையாய் நிறுத்தி சுட்டுத் தள்ள வேண்டும் போலிருக்கும். சே. என்ன கேவலமான மனிதர்கள்.

அதேநேரம் இதே முகநூலில் எம்மை உற்சாகப்படுத்தவும், ஊக்க மளிக்கவும், அவர்கள் தரும் ஆதரவு, எவ்வித எதிர்பார்ப்புகளுமற்ற எத் தனை நல்லுள்ளம் படைத்த கண் ணியமானவர்கள் இருக்கிறார்கள். அதிலும் பசுத்தோல் போர்த்திய புலிகளும் இல்லாமலில்லை. சுய கட்டுப்பாட்டுடனும், மரியாதை யுடனும் இருக்கும் பட்சத்தில் எம்மை யாராலும், எதுவும் செய்ய முடியாது என்பதில் உறுதியாய் இருந்தாள். எல்லா இடங்களிலும் பெண்களை உரசிப்பார்ப்பதற் கென்றே ஒரு பொறுக்கிக் கூட்டம் நாய் போல் நாக்கை தொங்கப் போட்டுக் கொண்டு காத்திருக்கும் போல என்று தன்னை சமாதானப் படுத்திக் கொண்டாள்.

பஹிண்ட.... பஹிண்ட... நடத் துனரின் சத்தத்தில் நினைவிற்கு வந்தவள், யன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். தான் இறங்குமிடம் வந்ததை அறிந்தவள் அவசரமாய் எழுந்து தள்ளாடிக் கொண்டு இறங்க முற்படுகையில்,

'இறங்குமிடம் கிட்ட வரும்

போது முன்னுக்கு வரத் தெரியாதா? இன்னும் தூக்க கலக்கமா?' என்று நடத்துனர் சகோதர மொழியில் திட்டுவதை காதில் வாங்கிக் கொள்ளாமல் பாய்ந்து இறங்கினாள். இன்னும் ஐந்து நிமிட தூரம் தான் காரியாலயம் வந்துவிடும் மெதுவாக நடக்கலா னாள். காரியாலய வாசலிலேயே அவன் நின்றுக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் யாழினிக்கு தலையில் இருந்து, கால் வரை பற்றிக் கொண்டு வந்தது. ஆபீஸில் தினமும் இவனின் தொல்லை பெண்களை வம்பிழுப்பதற்கென்றே வருவான் போல. எந்நேரமும் பெண்களுக்கு நடுவில் இரட்டை அர்த்த வசனங் களுடனும், வழிசல்களுடனும் அவனைக் கண்டாலே அவளுக்கு குமட்டிக் கொண்டு வரும். அவனுக்கு யாழினி தன்னை அவ மதிப்பதால் அவள் மீது எப்போதும் ஒரு தனிப்பட்ட கோபத்தை காட் டிக் கொண்டே இருப்பான்.

'டேய் ரமேஷ். சிலது ஆபீஸ்க்கு வேல பாக்க வருதா இல்ல பேசன் ஷோக்கு வருதான்னே தெரியல என்ன மினுக்கு செலரி பூரா ஜோடிக்கவே சரியாயிடும் போல ஹா... ஹா...'

நாடி நரம்புகளெல்லாம் முறுக் கேறி மனதில் வெடித்த கோபத் தால் கண்கள் சிவந்து கையும், உதடுகளும் துடித்தது 'வேண்டாம் யாழினி இது பொது இடம் பொறுமையா இரு. உன்னுடைய மரியாதையை கெடுத்துக் கொள்ளாதே' என்று மூளை எச்சரிக்கை செய்தது. 'மண்ணாங்கட்டி இப்படி பாத்து பாத்து தான் குட்டு வாங்கிட்டே இருக்கோம்' என்று தன்னையே திட்டிக்கொண்டு பொங்கி எழுந்தவள்,

'டேய் நில்லுடா என்னடா உனக்கு பிரச்சன... நான் ஜோடிச் சிட்டு வந்தா உனக்கெங்கடா வலிக்குது? 'ஆட்காட்டி விரலை அவன் முகமருகே நீட்டியவாறு எரிமலையாய் குமுறினாள். 'ஹேய் யாழினி வேணாம் மரி யாத... மரியாதயா... பேசு' நடுக் கத்துடன் உளறினான்.

'சீ... வாய மூடுடா உனக் கென்னடா மரியாத?... மரியாத கெட்டவனையெல்லாம் மதிக் கிறது எங்க தப்புதான்'

'எக்ஸ்கியுஸ் மி மிஸ் யாழினி வட் ஹெபண்ட்?' நாடகமாய் ஆங் கிலத்தில் பம்மினான்.

'ஏய்... சும்மா நடிக்காதடா. விட்டா ஓவரா போற, எங்கிட்ட வச்சிகாத. இது உனக்கு லாஸ்ட் வார்னிங்'. குமுறி முடித்தவள் நேர் கொண்ட பார்வையுடன் கம்பீரமாய் தன் அறை நோக்கி நடந்தாள். வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த சக பெண் ஊழி யர்கள் புது உத்வேகத்துடன் அவனை பார்வையாலேயே எரித்துக் கொண்டிருந்தனர்.



# உணவே மருந்து

உணவே மருந்தெனும் நிலை சிதைந்து உணவே வியாதி எனும் நிலைகடந்து தற்போது உணவே நஞ்செனும் காலத்தில் வாழ்கின்றோம்.

எங்களோடு இவையாவும் முடிந்திடவும் எதிர்கால தலை முறைக்கான சரியான வழிகாட்டு தலைவழங்கிடவும் எல்லோருமாய் ஒன்றிணைவோம்.

எங்கள் பிள்ளைகளை இலக்கு வைத்து தயாராகும் உணவு வகையில் முதன்மை பெறுவன இத்தகைய வண்ணம் நிறைந்த மென்பானங்கள் / குளிர் பானங்கள். வாங்கும் குளிர் பானங்களின் லேபளில் உள்ள அறிவுறுத்தல்களை தயவுசெய்து ஒரு முறையாவது வாசித்து பின்பற்றிடுங்கள்.

இத்தகையவற்றினூடாக பிள்ளைகளிற்கு சேரும் தேவையற்ற இரசாயனங்கள் நாளடைவில் அவற்றிற்கு அவர்கள் உடலை பழக்கப் படுத்துவதோடு அதனிலும் ஆபத்தான விளைவு கொண்ட போதைகள் வழி செல்லும் தூண்டலை செய்ய விழைகின்றது.

நிறமூட்டிய உப உணவு வகைக்குள் அடங்கும் பல விதமான பொருட்கள் கண்கவர் வர்ணங்கள் கொண்ட கொள்கலன்களில் இட்டு சிறுபிள்ளைகளிற்கு எட்டும் இடத்தில் காட்சிப் படுத்தப்படுத்தப்பட்டு பல்பொருள் அங்காடிகள் தொட்டு உள்ளூர் சிறு பெட்டிக்கடைகள் வரையும் கிடைக்கின்றது. உங்கள் பிள்ளைகளிற்கு இலகுவில் கிடைக்கவல்ல இத்தகைய பொருட்கள் தொடர்பாக விழிப்போடு செயற்படுங்கள்.

மேற்படி எந்த வகை உணவுப் பொருட்கள் / பானங்களாயினும் அவற்றின் சுட்டுத்துண்டிலுள்ள அறிவுறுத்தல்களை தயவுசெய்து ஒரு முறையாவது வாசிக்க முயற்சியுங்கள். தேவையற்றவற்றை இயலுமானவரை பிள்ளைகளிலிருந்து தூர மாக்குங்கள்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு எமைச் சூழவுள்ள இடங்களில் தாராளமாய் கிடைக்கும் இத்தகு பொருட்கள் தொடர்பாக அவதானமாக இருப்பது அவசியமாகிறது.

எங்கள்பிள்ளைகள்பாடசாலை அல்லது வெளியிடங்கள் சென்று வரும்வேளை அறிமுகமற்ற நபர்களால் அறிமுகப்படுத்தப்படும் பிள்ளைக்கு தேவையற்ற போதை தரவல்ல, தேவையற்ற சேர்மானங்கள் நிறைந்த இத்தகு பொருட்கள் தொடர்பாக உங்கள் பிள்ளையுடன் அடிக்கடி உரையாடி அத்தகு சந்தர்ப்பங்களில் அதிலிருந்து எவ்விதம் தப்பித்துக் கொள்வது போன்ற வழிமுறைகளையும் கற்பியுங்கள்.

பாடசாலை / வெளியிடத்திலிருந்து வீடுவரும் பிள்ளையிடம் அன்றைய நாளின் நிகழ்வுகளை கேட்டறியுங்கள்.

விளம்பரங்களின்வழி ஊக்குவிக்கப்படும் உடலிற்கு தீங்கு விளைவிக்கவல்ல பொருட்கள்

தொடர்பாக அறிவுறுத்துங்கள். விற்பனை மேம்படுத்தலிற்காய் மேற்கொள்ளப்படும் இலவச விநியோகங்களின் வழி நம்பிள்ளைகளிற்கு இலவச இணைப்பாய் நோயை வழங்குகிறோம் என்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை உணருங்கள்.

நஞ்சற்ற எதிர்காலத்தை நோக்கிய முதல் அடிகளை நீங்கள் ஒவ்வொருவரும் உங்களிடத்திலிருந்து ஆரம்பியுங்கள். உங்கள் வீட்டில் சிறு இடமே மிஞ்சியது எனினும் அதில் நான்கு பயன்தரு பயிர்கள் கொண்டு வீட்டுத்தோட்டம் உருவாக்குங்கள். அதிலிருந்து கிடைக்கும் உணவினை கொண்டு சிற்றுண்டி செய்ய இணையம்வழி உலாவி கற்றுக் கொண்டு முயற்சியுங்கள்.

மனநிறைவும், சந்தோஷமும் கூடவே தீங்கற்ற உப உணவும் கிடைத்துவிடும். ஓய்வு நேரத்தை பயன்மிக்கதாய் மாற்றவல்ல பிரயத்தனங்களை கைக்கொள்வதனூடு ஓர் வெற்றி பெறும் குடும்பமாய் மாறி மற்றையவர்களிற்கான முன்மாதிரிகளாகவும் திகழ்ந்திடுங்கள். மாற்றம் ஒன்றே மாறாதது - நல்ல மாற்றம் நன்மை தரும்.

**-ஆர்.ஜே.பிரகலாதன்**

# மழையாக நீயானால் குடையாக நானிருப்பேன்

மழையாக நீயானால்
குடையாக நானிருப்பேன்
துணையாக நீயானால்
காலமெல்லாம் வாழ்ந்திடுவேன்

பிரியாத வரமானால்
இணையாக நானிருப்பேன்
நிலையான வாழ்வென்றால்
தொலையாது கலந்திடுவேன்

புரியாத புதிராக
நீயும் வருகிறாய்
தெரியாத முகவரியாய்
தொலைந்தே போகிறாய்

கிடைக்காத வாய்ப்பெல்லாம்
இழந்தே செல்கிறதே!
நினைக்கின்ற நினைவுகள்
கலைந்தே முடிகிறதே!

விடிகின்ற பொழுதெல்லாம்
விடியலைத் தேடுகிறேன்
அழையாத விருந்தாளியாய்
கண்ணெதிரே தோன்றுகிறாய்

காத்திருந்து காத்திருந்து
காலமெல்லாம் முடிகிறதே!
கார்மேகம் வந்திட்டாலும்
மழைத்துளி தயங்குகிறதே!

சாதனைகள் நிலைநாட்டி
சரித்திரமும் படைத்திடணும்
தரணியெல்லாம் புகழாரம்
கொடிகட்டிப் பறந்திடணும்

காதலென்ற விளைநிலத்தில்
அறுவடைகள் செய்திடணும்
நிலையில்லா வாழ்வினில்
திட்டமாக வாழ்ந்திடணும்

எட்டாக்கனி வாழ்க்கையில்
ஏகாந்தம் வீசிடணும்
வசந்தகாலத்து பறவையாக
சிறகடித்துப் பறந்திடணும்.

**ஷல்மா ஷாஜஹான்**
வாழைச்சேனை

# இரகசிய கெமராக்களை கண்டுபிடிப்பது எப்படி?

## HOW TO FIND THE SECRET CAMERAS



இன்றைய கடினமான உலக சூழலில் பொது இடங்களிலும், ஆடையகங்களிலும், ஹோட்டல்களிலும், தனியார் விடுதிகளிலும் என்று எங்கு சென்றாலும் பெண்களின் பாதுகாப்பு என்பது உத்தரவாதமற்ற நிலையிலுள்ளது. எங்கு செல்வதாயினும் அச்சத்தோடே செல்ல வேண்டிய சூழலுக்கு விரும்பியோ, விரும்பாமலோ அனைவரும் தள்ளப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றோம்.

அவ்வாறான நிலையில் நம்மை நாமே பாதுகாக்க வேண்டிய தேவை ஒவ்வொருவருக்கும் கட்டாயமாக காணப்படுகின்றது.

எமது ஒரு போட்டோவோ, வீடியோவோ இருந்தால் அதை வைத்துக் கொண்டு தொழில்நுட்பத்தை தவறாகப் பயன்படுத்தி எம் வாழ்வையே கேள்விக்குறியாக்கும் கடும் ஆபத்தான சூழலுக்கு நாம் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்.

ஆகவே ஒவ்வொருவருக்கும் பொது இடங்களுக்கு செல்லும் போது எம்மை இரகசியமாக கண்காணிக்கும் கெமராக்களை இனங்கண்டு பாதுகாத்துக் கொள்வது எப்படி என்பதை விரிவாக ஆராய்வோம்...

1. **இரகசிய கெமராவின் அமைப்பு (Setup of secret camera)**

இரகசிய கேமராக்கள் டிவி மற்றும் திரைப்படங்களில் பொதுவானதாக இருக்கலாம். ஆனால் இந்த நாட்களில் அவை தங்களைச் சுற்றியுள்ளவர்களின் இரகசியப் படங்களைப் பிடிக்க தனிநபர்களால் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. இரகசிய கேமராக்கள் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து கணிசமான பரிணாமத்திற்கு உட் பட்டுள்ளன.

இரகசிய கேமரா தொழில்நுட்பம் விரிவடைவதற்கு முன்பு, குற்றக் காட்சிகள் டாகுரோடைப் புகைப்படம் மூலம் பதிவு செய்யப்பட்டன. இந்தக் கேமராக்கள் காட்சிகளைப் படம்பிடிக்க முடியும், ஆனால் பாக்கெட்டில் எடுத்துச் செல்லும் அளவுக்குச் சிறியதாகவோ அல்லது அசைவின் ஸ்டில் படங்களைப் பிடிக்கும் அளவுக்கு மேம்பட்டதாகவோ எதுவும் இல்லை. 1922 ஆம் ஆண்டு முதன்முதலில் உருவாக்கப்பட்ட புகழ்பெற்ற மினாக்ஸ் சப்மினியேச்சர் கேமரா வரை இது இருந்தது. புகைப்படம் கண்டுபிடிக்கப்பட்டு கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்குப்

பிறகு, இரகசிய கேமரா உருவானது. 1937 மற்றும் 1943 க்கு இடையில் ஜெர்மனியில் வால்டர் ஜாப் என்பவரால் முதல் சிறிய இரகசிய கேம ராக்கள் சில வடிவமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் உலகப் போரின் போது, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஏஜென்சிகள் உளவாளிகளுக்கு உதவி செய்த போதிலும், மினாக்ஸ் உற் பத்தி 1948 வரை கட்டுப்படுத்தப்பட்டது. கேமராவின் சிறிய அளவு மற் றும் மைக்ரோ ஃபோகசிங் திறன் ஆகியவை கண்காணிப்பு மற்றும் ஆவண நகலெடுப்பில் தெளிவற்ற பயன்பாட்டிற்காக ஏஜென்சிகள் ஆர்வமாக இருந்தன. நிலையான 35 மி.மீ கேமராவை விட இது மிகவும் பிரபலமாக இல்லை என்றாலும், மினாக்ஸ் இரகசிய கேமரா விரிவடைந்து சந்தையில் ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துக் கொண்டது.

பின் ஒரு இரகசிய கேமரா ஒரு கோட் பட்டனில் மறைக்கப்பட்டது. முகவர் செய்ய வேண்டியதெல்லாம், அவரது பாக்கெட்டில் உள்ள ரிலீஸ் ஷட்டரிலிருந்து ஒரு பொத்தானை அழுத்தினால் போதும், கேமரா புகைப்படம் எடுக்கும்போது கேமராவின் முன்புறம் விரைவாகத் திறக்கும். இவ்வாறு வளர்ச்சி கண்டு இன்றைய நாட்களில் தொலைக்காட்சியிலும், திரைச்சீலைகளிலும், சுவர்க் கடிகாரங்களிலும், மேசை விளக்குகளிலும், குளியலறை நீர்க்குழாய்களிலும் என அனைத்து இடங்களிலும் பொருத்தப்பட்டு இரகசியமாக பெண்களைக் கண்காணித்து அதன் மூலமாக பணம் சம்பாதிக்கும் நோக்குக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2. இரகசிய கெமராவின் நன்மைகள் (Advantages of secret cameras)

ஒரு நாணயத்திற்கு இரு பக்கம் போல இரகசியக் கெமராக்கள் மூலம் பாரியளவில் மோசடிகள் இருந்த போதும், சில நன்மைகளும் காணப்படுகின்றன. அவற்றை பின்வருமாறு நோக்குவோம்.

### புலனாய்வு இதழியல்

சுதந்திரத்தின் 70 ஆண்டுகால வரலாற்றில், ஒவ்வொரு ஆண்டும் இத ழியல் அதிக அளவுகளை எட்டியுள்ளது. கடினமான உண்மைகளைக் கண்டுபிடிப்பது மட்டுமல்லாமல், நான்காவது எஸ்டேட் உலகில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பேராசையை அம்பலப்படுத்த மோசடிகள் மற்றும் ஊழலின் இருண்ட உலகில் ஆழமாக மண்டியிடும் அளவிற்கு உருவா கியுள்ளது. இதனால், புலனாய்வு இதழியல் புகழ் பெற்றது. அதன் கிளை அம்பலப்படுத்தப்பட்ட பத்திரிகையாகும். குற்றம் செய்தவரை கையும் களவுமாகப் பிடிப்பதில்தான் எக்ஸ்போஸ் ஜர்னலிசம் இயங்குகிறது. உளவு கேமராக்களின் வருகையால் மட்டுமே இத்தகைய 'செயல்களை கண்டுபிடிப்பது சாத்தியமாகியுள்ளது என்று ஊடகவியலாளர்கள் கூறு கின்றார்கள். மற்றும் பல மோசமான ஊழல் மற்றும் குற்ற வழக்குகளை சாமானியர்களின் பார்வைக்கு வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

எனவே, ஒரு சமூகத்தைப் பொறுத்தவரை, உளவு கேமரா ஒரு தாராளமான வரமாக உள்ளது.

### குற்றங்களை வெளிக்கொணர்தல்.

உங்கள் கண் முன்னே ஒரு குற்றச்செயல் வெளிவருவதைப் பார்க்கும் போது நம்மில் பெரும்பாலோர் சூழ்நிலைகளால் சிக்கித் தவிக்கிறோம். அல்லது உங்களுக்கு கடுமையான அநீதி இழைக்கப்பட்டாலும் எம் கைகள் கட்டப்பட்டு நாம் ஆதரவற்ற நிலையில் உள்ளோம். எம்மை மீட்புக்கான உளவு செயலியாக இது செயற்படுகின்றது. சாமானியர் இந்த கேமராக்களை எளிதாக அணுகலாம் மற்றும் தனக்கு நடக்கும் அநீதியை அம்பலப்படுத்த இதனை பயன்படுத்த முடியும். சமூக ஊடகங்களின் வருகையால், அம்பலப்படுத்துவதற்கு ஒரு நாள் கூட ஆகாது. இரகசிய கேமராக்கள் மூலம் அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

### கடைகளில் இடம்பெறும் திருட்டுச் செயல்களைக் கண்டறிதல்

சில ஆண்டுகளுக்கு முன் ஷோரூம்களில் கடையடைப்பு நடந்தது. முறையான கண்காணிப்பு அமைப்புகள் இல்லாததால், கொள்ளையர்கள் கடைக்குள் புகுந்து, திருட்டுத்தனமாக பொருட்களை தூக்கிக்கொண்டு, சிக்காமல் சென்று விடுகின்றனர். ஆனால் சிசிடிவிகளின் வருகை இதற்கு காலவரையற்ற முடிவைக் கொண்டு வந்துள்ளது. குறைந்தபட்சம் அது சிறிது நேரம் பார்க்கப்பட்டது. ஆனால் கடையில் திருடுபவர்கள் சிசிடிவிகளில்இருந்துதப்பிக்கபுதுமையானவழிகளைக்கண்டுபிடித்தனர். இங்கே இரகசிய கேமராக்கள் திருட வரும் போது அவைகளை கையும் களவுமாக பிடித்து விடுகின்றன. கேமராக்கள் எங்கு உள்ளன என்பதை திருடர்கள் ஒருபோதும் அறிய மாட்டார்கள் மற்றும் கடையில் திருட முயற்சிக்கும் போது உடனே பிடிபட்டும் விடுவார்கள்.

### குழந்தை பராமரிப்பாளர் பிரச்சினை

இன்றைய பெற்றோர்கள் நவீன பெற்றோர்களாக இருப்பதால், குழந்தை பிறந்த உடனேயே பெரும்பாலோர் வேலைக்கு விரைகின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் குழந்தைகளை குழந்தைப் பராமரிப்பாளர்களிடம் ஒப்படைத்து விட்டு செல்கின்றனர். பெற்றோர் வெளியே சென்றிருக்கும் போது குழந்தை பராமரிப்பாளர்கள் தங்கள் பொறுப்புகளுக்கு அப்பால் செல்கிறார்கள் அல்லது மற்ற தேவைகளுக்காக குழந்தைகளை சித்திரவதை செய்கின்றனர். குழந்தை பராமரிப்பாளர்கள் அத்தோடு உரிமையாளரின் வீட்டில் இருந்து விலையுயர்ந்த பொருட்களையும் பணத்தையும் திருடுவது, வீட்டின் பொருட்களை அதிகமாக சாப்பிடுவது, டிவி மற்றும் வைஃபை போன்ற ஏற்பாடுகளை

அதிகமாகப் பயன்படுத்துவது, விருந்துகளுக்கு நண்பர்கள் அல்லது காதலர்களை அழைத்து அழிவை ஏற்படுத்துவது மற்றும் எல்லாவற்றையும் விட மோசமானது. குழந்தையை அதிகம் காயப்படுத்துவது போன்ற செயல்கள் இரகசிய கேமராக்களில் பிடிக்கப்படும்.

**குற்றச் சான்று**

சாட்சியங்கள் இல்லாததால் பல குற்றங்கள் பதிவு செய்யப்படாமலோ அல்லது விசாரணை இல்லாமலோ செல்கின்றன. துஷ்பிரயோகம் செய்த தரப்பினர் பாதுகாப்பிற்காக பயன்படுத்த ஆதாரம் அகற்றப்பட்டது அல்லது பதிவு செய்யப்படவில்லை என்ற விடயங்களை கையில் எடுத்துக்கொண்டு தப்பித்து விடுகின்றனர். இரகசிய கேமராக்களைப் பயன்படுத்தி, சம்பவங்களைப் பதிவுசெய்து, பலமானதோர் ஆதாரத்தை தயாரிக்கலாம். நீதிமன்றத்திற்கு உறுதியான ஆதாரங்களை வழங்கும் போது சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவருக்கு சரியான நீதியையும் பெற்றுக் கொள்ளலாம்.

**அநீதிகளை தவிர்த்தல்**

குழந்தையை வெளியே அனுப்பும் போது ‘கவனமாக இருங்கள், நாட்கள் மோசமாகிவிட்டன’ என்று சொல்லாத தாயை ஒருபோதும் காண முடியாது. நாட்கள் மோசமாகப் போய்விட்டன. பெண்கள் எண்ணிலடங்கா மற்றும் தேவையற்ற நிகழ்வுகளை சந்திக்க நேரிடு கிறது. பெண்கள் வேட்டையாடப்படுகிறார்கள், பூனை என்று அழைக் கப்படுகிறார்கள், கிண்டல் செய்யப்படுகிறார்கள், துன்புறுத்தப்படு கிறார்கள், தகாத முறையில் தொடப் படுகின்றார்கள் அல்லது மிக மோசமானவர்களால் கற்பழிக்கப்படுகிறார்கள். அத்தகைய சூழ்நிலை யில், வெளிப்படையான சாட்சிகள் இல்லாததால், பெண்கள் அநீதி இழைக்கப்படுகின்றார்கள். இரகசிய கேமராக்கள் மூலம் இவற்றை பதிவு செய்து நீதியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கும்.

## 3. இரகசிய கெமராவின் தீமைகள் (Disadvantages of secret cameras

இரகசியக் கெமராக்கள் சில நன்மையான விடயங்களுக்கு பயன் பட்டாலும் அவற்றால் ஏற்படும் பாதிப்புக்களும் ஏராளமே! அந்த வகை யில் அவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் சிலவற்றை நோக்குவோம்...

**வரையறுக்கப்பட்ட பார்வை**

இந்த மறைக்கப்பட்ட கேமராக்கள் சிறியதாக இருக்கும், எனவே அவற்றின் பெரிய சகாக்களுடன் ஒப்பிடும்போது பரந்த பகுதிகளை உள்ளடக்காது. ஒரு மறைக்கப்பட்ட கண்காணிப்பு கேமரா ஒரு குறிப் பிட்ட பகுதியை மறைப்பதற்கு மட்டுமே நல்லது, உதாரணமாக ஒரு புவீனி இயந்திரம் அல்லது கட்டடத்தின் நுழைவாயில் போன்றன. இத

னால் ஏனைய இடங்களில் இடம்பெறும் குற்றங்களை அவதானிப்பது கடினமாகும்.

### அச்சுறுத்தும் சக்தி இல்லை

சிலர் கேமராவில் சிக்கிய மாத்திரத்தில் அது எழுப்பும் சத்தத்தினூடாக குறித்த குற்றவாளிகள் செயலிழந்து விடுவார்கள். ஆனால் இதில் அவ்வாறு அச்சுறுத்தும் சக்தி இல்லை. கண்காணிப்பு கேமராவைப் பார்க்கும்போது மக்கள் நன்றாக நடந்துகொள்வார்கள். மறைக்கப்பட்ட கேமராவில் இந்த நன்மை இல்லை. ஒரு குற்றம் நடந்த பின்னாலே தான் அது பற்றி இனங்காணும் நிலை இருக்கும்.

### தனியுரிமை பிரச்சினை

மறைக்கப்பட்ட பாதுகாப்பு கேமராக்கள் தங்கள் தனியுரிமையை மீறுவதாக பெரும்பாலான மக்கள் நினைக்கிறார்கள். நீங்கள் வீட்டுப் பணியாளர்கள் அல்லது சக ஊழியர்களின் அன்றாட வேலைகளை உளவு பார்க்க விரும்பினால் இது மிகவும் முக்கியமானது. ஆனால் இது வீடுகளில் பொருத்தப்படும் போது குடும்ப உறுப்பினர்களின் தனியுரிமையை மீறும் வகையிலேயே இருக்கும்.

### ஆபாசப் படங்கள் தயாரிப்புக்கு உதவுதல்.

பிரசித்தி பெற்ற ஹோட்டல்களில் கூட இந்த கெமரா மறைமுகமாக பொருத்தப்பட்டு கணவன்-மனைவி என் தங்கும் நிலையிலும் தவறான முறையில் ஆபாசப் பதிவுகளை பதிய இது பயன்படுவது ஓர் மாபெரும் தீமையான விடயமாக கருதப்படுகின்றது.

### பெண்களின் சுதந்திரம் மீறப்படல்.

இது செயலில் இருக்கும் இடங்கள் எல்லாம் பெண்களின் பாது காப்பிற்கு உத்தரவாதம் இல்லாத தன்மை காணப்படுவதோடு இதனால் பெண்களுக்கு ஏராளமான பாதிப்புக்களும் ஏற்படுகின்றன.

### பணத்திற்கான மிரட்டல்கள்

எமக்கே அறியாமல் எம்மை இரகசிய கெமரா மூலமாக கண்காணித்து அதனை வீடியோ ரெகோட் செய்து பணம் வேண்டி மிரட்டும் நிலை ஏற் படும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

## 4. இரகசிய கெமராக்களை கண்டறிவது எப்படி? (How to find the secret cameras?)

இவ்வளவு நேரம் இரகசியக் கெமரா என்றால் என்ன? அதன் வர லாற்று பாவனை, நன்மை மற்றும் தீமைகள் பற்றி ஆராய்ந்தோம். இப்போது இரகசியக் கெமராக்கள் இருக்கும் இடத்தை எவ்வாறு கண்ட றிந்து பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றி பார்ப்போம்...

**நாம் செல்லும் இடத்திலுள்ள சிறிய பொருட்களை ஆராந்து பார்த்தல்.**

நாம் சென்றுள்ள ஹோட்டல்/ ஆடையகம்/ விடுதி/ உணவகம் போன்றவற்றிலுள்ள தனிப்பட்ட அறைகளை பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைகள் வரும் போது அங்குள்ள சிறிய சிறிய பொருட்களை, திரைச்சீலைகளை, அதே போல் சந்தேகம் வரும் வகையில் அங்கு வைக்கப் பட்டிருக்கும் அலங்காரப் பொருட்கள் போன்றவற்றை அலசி ஆராய்ந்து பார்ப்பது சிறந்தது.

எந்தவொரு பிரசித்தி பெற்ற ஹோட்டலாக இருந்தாலும் சிலரது மனோ இச்சைகள் பணத்தை சம்பாதிக்க எப்படியான வழிகளை நாடு மென்பது தெரியாது. ஆகவே எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள அங் குள்ள பொருட்களை ஆராய்ந்து கொள்தல் சிறந்ததாகும். அவ்வாறு கெமரா இனங்காணப்பட்டவிடத்து அதனை உடனடியாக நீக்கம் செய் வது சிறந்தது.

**அறையை இருளாக்கி விட்டு கண்காணித்தல்**

நாம் இருக்கும் அறையை சிறு வெளிச்சம் கூட வராத வகையில் இரு ளாக்கிய பின் உன்னிப்பாக கவனிப்பதன் மூலமும் சில வேளை இனங் கண்டு கொள்ள முடியுமாய் இருக்கும். ஏனெனில் அதன் சிவப்பு நிற வெளிச்ச அடையாளத்தை வைத்து நாம் இலகுவாக கண்டறியலாம். ஆனால் இதிலுள்ள பிரச்சினை யாதென்றால் சில வகை இரகசிய கெம ராக்களில் சிவப்பு வெளிச்சம் வராத வகையிலும் இருக்கும். ஆதலால் நாம் இருளாக்கினாலும் அதனை கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும்.

**தொலைபேசியின் கெமரா மூலம் இனங்காணல்.**

நாம் இருக்கும் அறையை இருளாக்கிய பின் எமது தொலைபேசியின் கெமரா மூலம் அறையில் சந்தேகமான இடங்களை பார்க்கும் போது இரகசிய கெமராக்கள் இருந்தால் கண்டு கொள்ள முடியும். இது சில கெமராக்களுக்கே பொருந்தும். ஒரு சில நேரங்களில் சில கெமராக்கள் தொலைபேசியின் சாதாரண கெமராக்களில் தென்படாது.

**தொலைபேசி அழைப்புகளை கெமராவின் அருகில் கொண்டு செல்லும் போது இரைச்சலை உணர்தல்**

நாம் இருக்கும் அறையில் இருந்து கொண்டு யாரோடாவது தொலை பேசி அழைப்பை ஏற்படுத்திய பின் அறையை சுற்றி வரும் போது கெமரா எந்த இடத்தில் உள்ளதோ அதற்கருகில் இருக்கும் போது மட் டும் தொலைபேசியில் ஓர் இரைச்சல் சத்தத்தை உணரலாம். இதன் மூல மாக கெமரா எங்கு உள்ளது என்பதை கண்டு பிடிக்க முடியும். ஆனால் இப்போது வரும் 5ஜீ தொழில்நுட்ப தொலைபேசிகளில் இதனை கண்டுபிடிக்கும் சாத்தியம் 50% மட்டுமே.

**கண்ணாடியால் சுவர் காணப்படும் அறைகளில் இருக்கும் போது விரல்கள் மூலம் கண்காணித்தல்.**

*சில உயர் ரக ஹோட்டல்களில்/ ஆடையகங்களில்/ விடுதிகளில் கண்ணாடியால் சூழப்பட்ட அறைகளும், குளியலறைகளும் காணப் படலாம். அவ்வாறான நேரங்களில் கண்ணாடியுள்ள இடத்தில் விரல் களை வைத்து விரலுக்கும் கண்ணாடிக்கும் இடையில் இடைவெளி உள்ளதா என்பதை சோதித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இடை வெளி இல்லையென்றால் அங்கு கெமரா இருக்கின்றது என்பதை கண்டு பிடிக்கலாம்.*

**Hidden camera detector**

*மேற்கூறப்பட்ட எந்த வகையில் முயற்சித்தும் கண்டு பிடிக்க முடியவில்லை என்ற நிலையில் இந்த செயலியானது இரகசிய கெமராவை கண்டுபிடிப்பதில் பெரிதும் உதவியாக அமையும்.*

*முதலில் இந்த செயலியை எமது தொலைபேசியில் தரவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.*

*அதன் பின் அதனுள் நுழைந்து நாம் இருக்கும் அறையை சுற்றியுள்ள அனைத்து வெளிச்சங்களையும் அணைத்து ஒரு சிறு வெளிச்சமும் இல்லாமலாக்கிய பின் இந்த செயலியின் கெமராவை ஒன் செய்து அறையை சுற்றி வர கொண்டு வரும் போது எங்கு இரகசிய கெமரா உள்ளதோ அங்கு இருக்கும் போது இந்த செயலியில் பீப் சத்தத்துடனான சிவப்பு நிற அடையாளத்தோடு ஓர் அச்சுறுத்தல் எமக்கு கிடைக்கும்.*

*இதன் மூலம் நாம் மிகவும் இலகுவாக அறையில் எங்கு கெமரா இருக்கின்றது என்பதை கண்டு பிடித்துக் கொள்ளலாம்.*

***செயலியின் இணைப்பு***

https://play.google.com/store/apps/details?id=hiddencamdetector.futureapps.com.hiddencamdetectro

*அந்த வகையில் இன்றைய நவீன உலகில் தொழில்நுட்பமே எதிரியாக மாறும் கடின சூழலில் நாம் செல்லும் இடங்களிலும், தங்கும் விடுதிகளிலும், ஹோட்டல்களிலும் என அனைத்து இடங்களிலும் இரகசியக் கெம ராக்களின் அமைப்பு எவ்வாறு இருக்குமென்பதை புரிந்து அதன் நன்மை, தீமை என்பவற்றையும் தெரிந்து, இரகசியக் கெமராக்களால் ஏற்படும் தீங்குகளிலிருந்து எம்மையும், எம்மைச் சார்ந்தவர்களையும் பாதுகாக்க இன்றிலிருந்தே விழித்துக் கொள்வோமாக!*

**பாத்திமா ஹகீமா அமீனுதீன்**
(B.A.®, HNDip in psychology and counselling, Dip in English, NVQ-04 ICTT)
ஓட்டமாவடி

# உறவுகள்

## (சிறுகதை)

செல்வனம் பரப்பிய கதிரவன் இளைப்பாற கடலுக்குள் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். கடல் மணல் மீது நண்டுகளின் நாட்டியத்தோடு சின்னஞ்சிறு சிட்டுக்களின் ஆட்டமும் ஓட்டமும் கடலலைகளை விடவும் மனதிற்கு மகிழ்ச்சியே அனசிற்கு. சில காலமாகவே கடற்கரையில் ஓடி விளையாடும் சிறுவர்களின் சேட்டையும் சிங்கார சிரிப்பும் மழலை மொழியும்தான் அவனின் மன நிம்மதிக்கு காரணமாக இருக்கிறது. ‘அங்கிள் இந்த பட்டத்துட நூல இருக்க பிடிச்சிக்கோங்க விட்றாதீங்க. நான் தண்ணி கொஞ்சம் குடிச்சிட்டு வாரன்’ என்றதும் மனசு முழுக்க மகிழ்ச்சியோடு நூலை இறுக்க கையோடு சுற்றி பிடித்துக் கொண்டு சிறுவன் ஓடும் திசையை நோக்கி பார்வையை திருப்பினான். தாயின் கையிலிருந்த போத்தல் நீரை மடமடவென ஒரே மூச்சில் குடித்து ஓடோடி வந்து பட்டத்தின் நூலை வாங்கி சிட்டாய் பறந்தான். ஆனால் அனசின் கண்கள் ஏனோ போத்தலை பற்றிப் பிடித்துக் கொண்டுள்ள பேரழகியின் மீதே பதிந்திருந்தது. கண்ணிமைக்காது பார்த்துக்கொண்டிருந்தான். நான் காண்பது கனவா நனவா என்று ஒரு முறை தன்னைத்தானே கிள்ளிப் பார்த்தான். மெய்யேதான் அவள் நுஸ்ராவேதான். பார்ப்போரை ஈர்க்கும் அதே அழகிய வதனம். சற்றும் எடை கூடாத மெல்லிய உடல். அவள் மாறியிருக்கவேயில்லை. அருகில் இரட்டை பெண்பிள்ளைகளை இரு கைகளிலும் தூக்கியபடி கட்டு மஸ்தான ஒருவன் நிச்சயமாக இது நுஸ்ராவின் கணவன் மற்றும் பிள்ளைகள் தான். இருந்தும் நானெப்படி போய்ப்பேசுவது? மச்சான் என்றா இல்லை முன்னால் கணவனென்றா நான் அவளுக்கு செய்த துரோகத்தை நினைத்து எவ்வளவு பாவமன்னிப்பு கேட்டாலும் போதாது. என எண்ணியவாறே கடலலைகளை பார்த்துக் கொண்டு அவன் எண்ண அலைகளும் பின்னோக்கிப் போனது.

அனஸ் கொழும்பில் பிரபல தனியார் கம்பனியில் தலைமை அதிகாரியாக கடமையாற்றுகிறான். வீட்டின் ஒத்த ஆண்பிள்ளை. தாய் சொல்லைத் தட்டாத கிளிப் பிள்ளை. பணத்திற்கு பஞ்சமில்லை என்றாலும் குணத்திற்கு இடம் கொஞ்சமேனும் இவனுக்கும் இவன் தாய் ஆசியாவுக்கும் இல்லவே இல்லை. ஆசியாவின் கூடப் பிறந்த சகோதரனின் மகள் தான் நுஸ்ரா. சொந்தம் விட்டுப் போகக் கூடாது என்பதற்காகவும் சொத்துக்கள் தூரமாய் போய் விடுமோ என்றும் அப்பாவி நுஸ்ராவை மருமகளாக்கிக் கொண்டாள் ஆசியா.

திருமணமான புதிதிலேயே 'இங்க பாரு நுஸ்ரா.. அனஸ் என்ன தான் உன்ட மச்சான் என்டாலும் இவன் நான் பெத்த புள்ள நான் கீறின கோட்டத் தாண்ட மாட்டான். இது நாள் வரையில என்ன மீறி எதுவும் செஞ்சதில்ல இனிமேலும் என்ற புள்ள இப்படிதான் இருப்பான். நீ வந்து மாத்தனும்னு நினைக்கிற வேலையெல்லாம் எனக்கிட்ட சரிப்பட்டு வராது.' என்று அதி காரம் ஆரம்பமானது. ஒரு வருடத் தில் ஆறுமாதங்கள் அவுஸ்திரேலியா வில் வேலை எனவும் மீதி ஆறு மாதங்கள் உள்நாட்டில் வேலை வேலை மீட்டிங் ஆபிஸ் டூர் என்றும் உள்நாட்டிலேயே உலாவித் திரிந்தான். நுஸ்ராவோடு நேரம் செலவழிக்கவே குடும்பம் நடத் தவோ நேரமின்றி வேலையை காரணம் காட்டி ஓடித் திரிந்தான். திருமணமாகி ஒரு வருடம் முடிய ஆசியாவின் பேயாட்டம் ஆரம் பமாகியது. 'கல்யாணம் முடிஞ்சு ஒரு வருஷமும் முடிச்சாச்சு இன்னும் உன்ட வவுத்துல ஒன்னும் தங்கின பாடில்ல நா. போற வாற எடத்துல எல்லாம் மருமகளுக்கு என்ன இன் னும் ஒரு விஷேசமில்லையா என்டு என்னட்டதான் கேக்குறாங்க. எனக்கு தல காட்ட ஏலாம இருக்கி' என்ற குத்தல் பேச்சில் மலடி என்றே முத் திரை குத்தி விட்டாள்.

எவ்வளவோ போராடி பார்த் தாள் நுஸ்ரா. இராட்சசிக்கு இவள் மொழி புரியவா போகுது என் றெண்ணி கணவன் அனசிடம் பேச வந்தாள்.'ஏய் மாமி பேசினத நீங்க ளும் கேட்டுக்கொண்டு தானே இருக்கிறீங்க. இது நாங்க ரெண்டு பேரும் சம்பந்தப்பட்ட விஷயம் தனியா எனக்கு மட்டும் ஏன் வீண் பழி. நாங்க ரெண்டு பேரும் வேணும்னா டாக்டர்கிட்ட போய் பார்ப்போம்' என்று கூறி வாயை மூடும் முன்பே 'நான் என்ன ஆம்பள இல்ல என்டு சொல்றியா. உனக்கு தகுதியில்ல அதை என்ட தலையில கட்டி நாடகம் ஆடுற அப்படிதானே' என்று கத்தி தாயோடு சேர்த்து கொடி தூக்கி மலடி பட்டம் சூட்டி விவாகரத்து பண்ணி தாய்வீட்டுக்கே இருவரும் சேர்ந்து அனுப்பியும் விட் டார்கள்.

நுஸ்ராவின் இத்தா காலம் முடி வடைந்ததும் மீண்டும் அனசிற்கு பெண் பார்க்கும் படலம் ஆரம்ப மானது. ஆசியாவின் குணம் வெட்ட வெளிச்சமாகியதால் ஊரில் யாரும் இரண்டாம் தரமாக பெண் கொடுக்க முன் வரவில்லை. இதற் கிடையில் அனஸ் வேலையை காரணம் காட்டி ஐந்து வருடமாக அவுஸ்திரேலியாவிலே கிடந்தான். ஆசியாவிற்கும் உடல் நலம் குன்றிப் போனது. நீரிழிவோடு சேர்த்து இரத்த அழுத்தமும் ஒட்டிக் கொண்டு வாட்டியது.

வீட்டு வேலைக்கு ஒத்தாசைக்கு ஒருத்தி தேவை என்பதற்காக மக னிடம்' எவ்வளவு காலம் தான் மவன் நீ இப்படி வெளிநாட்டுலயே ஒத்தயா இருப்ப கூடிய சீக்கிரமா நாட்டுக்கு வந்து ஒரு கல்யாணம் பண்ணிக்கோப்பா உன்ன கைக் கழுவி விட்டவ எல்லாம் கல்யாணம் பண்ணி டுபாய்ல வாழ்றா. அவுட மூஞ்சில கரிய பூசசரி நீ வந்து முடிச்சி ஒன்டுக்கு நாலு



பெத்துக்கோப்பா’ என்று கைய டக்க தொலைபேசியூடாக ஒரு குரல் பதிவை வைத்ததுதான். இரண்டே மாதத்தில் பறந்தோடி வந்து கிழக்கு மாகாணத்தில் தரகர் மூலம் பெண் தேடி திருமணமும் முடித்துக்கொண்டான்.

வந்தவள் முதல் நாளே ஆசியாவிடம் வேலையை காட்டி விட்டாள் ‘நான் இந்த வீட்டுக்கு வாழ வந்தவ வேலைக்காரியா நீங்க என்னய நினைச்சா என்ட வேட்ட ஆரம்பமாயிரும். நாங்க சின்னஞ் சிறுசுங்க எங்களுக்கு நடுவுல நீங்க வந்தா நாங்க தனிக் குடித்தனம் தான் போக வேண்டி வரும்’ என்று ஒரு போடு போட்டு அனசை பார்த்து ‘நான் வேலைக்கு போறது என்ட சந்தோஷத்துக் காகவும் நான் படிச்ச படிப்பு வீண்போகக்கூடாது என்றதுக் கும் தான் உங்களையும் உங்க உம்மாவையும் பாக்குறதுக்கில்ல. எனக்கு இப்பவே புள்ள குட்டி எல்லாம் பெத்துக்கிட்டு வீட் டோட இருக்க இஷ்டமில்ல எனக்கு லைப்ப என்ஜோய் பண்ண ணும். எனக்கு எப்ப தோனுதோ அப்பதான் பிள்ள பெத்துக்கிறது பத்தி யோசிப்பேன். என்ன சொல்றீங்க மிஸ்டர் அனஸ்??? இதுக்கெல்லாம் ஒகே என்டு நீங்க சொல்லித்தான் ஆகனும் ஏலா என்டு சொல்லி என்னையும் விவாகரத்து பண்ணினா உண் மையிலே உங்களுக்கு தான் குறையென்டு ஊரே சொல்லும்’ என்று வாய்மூடாது பேசி பதி லுக்கு காத்திராமல் அறைக்குள் நுழைந்தாள். அனசும் ஆசியாவும் பேயறைந்ததை போல் நின்று கொண்டு இருந்தனர்.

நாட்கள் சுழல மாமியார் மருமகள் சண்டை, அலுவலக வேலை எல்லாமாக சேர்ந்து அனசின் நிம்மதியை இல்லாமல் செய்தது. அப்போது தான் அவன் உணர்ந்தான். தாய் சொல்லை தட்டக் கூடாதுதான். அதற்காக அவள் கூறிய அனைத்திற்கும் கூஜா தூக்கியது எவ்வளவு பெரிய தவறென்று. ஆசியாவும் நோயோடு போராடிக் கொண்டே புலம்புவாள் ‘என்ட ரெத்தம் என்டா என்னய பாத்தீக்கும் இவள் பொறத்திடா இவ பாக்கமாட்டா’ என்று.

‘அஸ்ஸலாமு அலைக்கும்’ என்ற குரல் கேட்டதும் நிலைக்கு திரும்பி அண்ணார்ந்து பார்த்தான். அருகில் நுஸ்ராவும் கணவரும் நின்று கொண்டிருந்தனார். காற் சட்டையில் ஒட்டிய மண்ணை தட்டிவிட்டு எழுந்து நின்றான் அனஸ். ‘நான்நுஸ்ராட ஹஸ்பன்ட்’ என்று அறிமுகம் செய்து கதைக்க ஆரம்பித்தார். ‘ப்ரோ நாங்க உங் கள மீட்பண்ணத்தான் இங்க வந்ததே. நாங்க நாட்டுக்கு வர காரணமே அங்கிள் தான் அவரும்

படுத்த படுக்கையிலே இருக்கிறாரு. உங்கட உம்மாவும் சுகமில்லாம இருக்கிறாங்க ரெண்டு குடும்பமும் பகைய மறந்து பேசுற மாதிரி தெரியல்ல. அவங்கட காலம் மாதிரியில்ல எங்கட காலம். மனசுல பகைய வளர்த்துட்டு உறவுகள பிரிஞ்சு வாழ எங்களுக்கு விருப்பமில்ல. எவ்வளவு காலத்துக்கு தான் இப்படியே இருக்கிறது? உங்கட உம்மாக்கும் கூடப் பொறந்தது அவரு மட்டும் தான் அவரு உங்கட உம்மாட மேல உசிரே வெச்சிருந்தவரு, என்ன தான் பேசிக்காம இருந்தாலும் பாசம் இல்லாம இருக்குமா?' என்றார் ஷிஹான். நுஸ்ரா 'அனஸ் மச்சான் அல்லாஹ் என்ட வாழ்க்கைய உங்களோட வாழ எழுதில்ல அவ்ளோதான். எல்லார்ட வாழ்கையிலயும் மனஸ்தாபங்களும் பிரிவுகளும் இல்லாமலா இருக்கு. கடைசி காலத்துல மாமிய பார்த்து பேசனும் என்றதுதான் வாப்பாட ஆச. நான் என்ன சொல்வேனோ என்று தான் வாப்பா பேசாமலே இருந்திட்டார். என்னால தான் இந்த குடும்பம் பிரிஞ்சது என்று எனக்கு ஒரு எண்ணம் குறுகுறுத்துக்கொண்டே இருக்கும். அத எப்படி சரி செய்ய போறேன் என்டு தெரியாம இருக்கிறேன். நான் லீவு முடிஞ்சு துபாய் போறதுக்குள்ள பிளீஸ் நீங்க மட்டும் சரி வந்து வாப்பாவ பார்த்து பேசிட்டு போங்க' என்று கூறி முடித்தாள்.

நுஸ்ரா பேசி முடிய அனசின் கண்கள் குளமாக இருந்து. 'முதல்ல என்னயும் உம்மாவையும் நீங்க மன்னிச்சிடுங்க நுஸ்ரா. நீங்க எங்கள மன்னிக்காமபடைச்சரப்பும் எங்கள் மன்னிக்க மாட்டான். கட்டாயம் இன்றைக்கே நான் உம்மாவோட வந்து மாமாவ பாக்குறேன். என்று விடை பெறும்போது 'மாமா கட்டாயம் அப்பாட ஊட்டுக்கு வாங்க' என்று நுஸ்ராவின் மகன் மழலை மொழியில் சொன்னதும் வாரியணைத்து முத்தமிட்டு விடை பெறுகிறான்.

முற்றும்.

**ஷியாஸ்னா பைஸல்**
நாவலப்பிட்டி.

# கூடிப் பேசுவோம்

மனச்சுமையை
இறக்கி வைக்க
எங்கும் செல்ல
வேண்டியதில்லை

வீட்டினிலுள்ள
குடும்ப உறவுகளோடு
கூடிப் பேசினாலே
போதுமாம்

வாய்ப்பை
ஏற்படுத்தித் தந்துவிட்டு
வாசலுக்கு
வெளியே நின்று
வேடிக்கைப் பார்க்கிறது

தொடர்ந்து
தூறிக்கொண்டேயிருக்கும்
சாரல்மழை

**பாக்யபாரதி**
தருமபுரி



# அரசாங்கத்தால் அமுல்படுத்திய போஷாக்கு உணவுத் திட்டமும், மாணவர்களின் நிலைமையும்

ஓர் சிறிய தீவான இலங்கை நாட்டில் அரசாங்கமானது பல திட்டங்களை மக்களின் நலனுக்காக அமுல்படுத்தி அதை செயற்படுத்தியும் வருகின்றது என்பதை இலங்கை வாழ் பிரஜைகளான எம்மால் உணர முடிகிறது. அந்தவகையில் மிகவும் வரவேற்கத்தக்க அம்சம் தான் அரசாங்க பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவசமாக போஷாக்கு உணவு வழங்கும் திட்டமாகும்.

இத்திட்டமானது ஆரம்பத்தில் சிறிய அளவிலான மாணவர் தொகையை உள்ளடக்கிய பாடசாலை வலயங்களிலேயே நடைமுறைபடுத்தப்பட்டு வந்தது. அண்மை காலமாக அதாவது சுமார் 5/6 மாதங்களாகவே நாடளாவிய ரீதியில் அனைத்து இலங்கை அரசாங்க பாடசாலைகளுக்கும் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

உண்மையாகவே இத்திட்டத்தை அமுல்படுத்தி நடைமுறைபடுத்தியமைக்கும் எம் அரசாங்கத்தை கொண்டாடியாக வேண்டும். இத்திட்டத்தின் நோக்கமானது, ஒருவரின் அடிப்படை உணவு வேளையாக காலையுணவே திகழ்கிறது. உடல் ஆரோக்கியத்திற்கும், மூளை விருத்திக்கும் இவ்வுணவு வேளை பிரதான தாக்கத்தை செல்வாக்கு செலுத்தி விடு கிறது.

எனவே இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்றபடியால் மாணவச் செல்வங்களுக்கு காலையுணவு போஷாக்கானதாக சென்றடைய வேண்டும். அதிலும் முக்கியமாக வறிய குடும்பப் பிள்ளைகளுக்கு சிறந்த போஷாக்கான உணவு கிடைப்பதரிது. இதனால் அவர்கள் பல உடல், மன ரீதியான நோய்களுக்கு ஆளாகுவதையும் தவிர்க்கும் நோக்கிலும் செயற்பட்டு வருகிறது என்பதை நாம் அறியக்கூடியதாய் உள்ளது.

எனவே, இத்திட்டத்தினால் அனைத்து அரசாங்க பாடசாலை மாணவர்களுக்குமே திங்கள் தொடக்கம் வெள்ளி வரை போஷாக்கான உணவுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. சோறு, பருப்புக்கறி, கீரை சுண்டல், நெத்தலி, முட்டை, மரக்கறி, ஏனைய மாமிசம் போன்ற அடிப்படை புரத கல்சிய உணவுடன் ஓர் நாளைக்கு பழமொன்றையும் வழங்கி வைக்கப்படுகிறது. உண்மையாகவே ஓர் பிள்ளைக்கு தினமும் இவ்வாறான போஷாக்குணவையும் பழம்உட்கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைப்பதில்லை. இத்திட்டத்தினால் ஒவ்வொரு பிள்ளைகளுக்குமே அதிக போஷாக்கான உணவைப் பெற்றுக் கொள்ள சிறந்த சந்தர்ப்பமாக இது காணப்படுகிறது.

மேலும் இதனால், பொதுவாக

வீட்டிலும் கடைகளிலும் தயாரிக்கப்படும் காலையுணவில் காபோஹைதரேற்றாகிய மாப்பொருள், அதிகமான எண்ணெய் பாவனை உள்ள உணவை மாணவர்கள் தவிர்க்கப்படுதலால் இம் மாணவர்கள் உற்சாகமாக வலம் வரவும் சில மாணவர்களின் வறிய குடும்பப் பின்னணியால் காலையுணவை தவிர்க்கும் பாவப்பட்ட மாணவர்களுக்கும் இத்திட்டமானது அவர்களின் ஆரோக்கியத்திற்கு பெரும் பங்களிப்பு செய்கிறது. மேலும், உணவுக் கூம்பகத்தின் படி சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு பிள்ளைக்கு கிடைக்கப்பட வேண்டிய போஷாக்கு கிடைப்பதால் மாணவர்களின் உடற்திணிவும் மாற்றமடைவதால், அவர்களின் போசணை மட்டமானது வயதுக்கேற்ப சீரான வளர்ச்சியை பெற்றுக்கொண்டு சுறு சுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் தம்மை ஏனைய துறை சார் செயற்பாடுகளுக்கு ஈடுபட வைத்து, சிறந்த பலமான மாணவர் சமூகத்தை உருவாக்க அரசாங்கம் அமுல்படுத்திய இந்த போஷாக்கு உணவு திட்டமானது பெரும் பங்களிப்பை மாணவர்களுக்கு இலவசமாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' என்ற பழமொழிக்கிணங்க அரசாங்கம் இத்திட்டத்தை மாணவர்களின் போஷணை மட்டத்தில் கூடிய கவனம் செலுத்தினாலும் கூட இத்திட்டத்தில் சில எதிர்மறை பக்கங்களும் மறைமுகமாக இருப்பதை காண முடிகிறது. எவ்வாறு அப்படி இருக்க முடியும் என வியக்கின்றீர்களா? இந்த திட்டத்தை அரசாங்கம் மாணவர்களின் நலனுக்காக, அவர்கள் உட்கொள்ள வேண்டி அமுல்படுத்தப்பட்டது. இவ்வாறு வழங்கப்படும் உணவினை அவர்கள் உட்கொள்கிறார்களா என்பதே கேள்வி.

மாணவர்களின் நலன் கருதி இலவசமாக இவ்வாறு வழங்குவது மிகப்பெரிய சேவையாக இருப்பினும் கூட ஐந்து நாட்களுமே பிரதான உணவாக சோறு மற்றும் பருப்பு, மரக்கறி, மாமிசம் என்கையில் குறிப்பாக இளம் சிறார்களான தரம் 1 தொடக்கம் 5 மாணவர்களுக்கு அலுப்பு என்ற மனக்கசப்பு ஏற்பட்டு விடுகிறது. இதனால் அவர்கள் பாடசாலையில் காலையுணவை உட்கொள்வதையே நிறுத்தி விடுகிறார்கள். ஆரோக்கியம் என்றாலுமே அவர்கள் மறுக்கிறார்கள். இதனால் தங்கள் வீடுகளிலும் பகலுணவில் சோறு, மரக்கறி வகைகளை சேர்த்துக் கொள்ள மறுக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு என்பதே கசப்பான மெய்யாகும்.

அத்துடன் இத்திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்திய போதிலும், பாடசாலை ரீதியாகவே உணவு தயாரிக்கும் நபர்கள், தயாரிக்கும் விதம் மற்றும் பரிமாறுவது என்பதெல்லாம் நடைபெற்று வருகின்றது. ஆரோக்கியமான உணவு என்றிருந்த போதிலும் அதை சமைக்க பொறுப்பேற்றுள்ளவர்கள் சுகாதார முறையில் சமைக்கின்றார்களா எனும் விடயம் தொடர்பாக பெற்றோர் மத்தியில் சில கருத்துக்கள் எழுந்துள்ளன. ஏனெனில் இவ்வாறு உணவு வழங்கும் திட்டத்திற்கு பிறகு அனேகமான மாணவர்களுக்கு வாந்தி பேதி, வயிற்றுப்போக்கு போன்றவற்றுக்கு ஆளாகின்றனர். இது சுகாதாரமற்ற முறையில் உணவு

சமைத்து பொதி செய்வதாலும் ஏற்பட்டிருக்கலாம் என்றும் ஊகிக்க முடியுமாக உள்ளது.

இவ்வாறு மாணவர்களுக்கு தொடர்ந்தும் ஏற்பட்டால் உணவில் அலுப்பு உணர்வே மென்மேலும் அதிகரிக்கும். எனவே இதனால் சாதாரணமாக கிடைக்கும் ஊட்டச்சத்துக்களும் அவர்களுக்கு கிடைக்காமல் அவர்களின் ஆரோக்கியம் பலவீனமடையவும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அத்துடன் உணவு வீண்விரயம் என்பதையும் தாண்டி பலபேருக்கு இத்திட்டத்தின் மூலம் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றிருந்தாலும் கூட எம் அரசாங்கம் பல கோடி செலவழித்து இத்திட்டத்தை நடைமுறைபடுத்தியது என்னவோ, அரசாங்க பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கான காலையுணவு கிடைக்க வேண்டும் எதிர்கால மாணவர்கள் சிறந்த ஆரோக்கியமுள்ள பிரஜையாக வலம் வர வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் தான் அமுல்படுத்தப்பட்டது. ஆனால் ஏதோ மேற்கூறப்பட்ட சில சந்தர்ப்பங்களால் மாணவர்கள் உட் கொள்ளாது போனால் மாணவர்களின் நிலையென்ன?

இவ்வாறான பல கருத்துக்கள் எம்மில் தோன்றினாலும் கூட

எம் நாட்டு மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தை நிறுத்த வேண்டும் என கூறுவது தவறானதாகும் என்பதை ஆழமாக எம்மால் உணர முடிகிறது. பலர் இத்திட்டத்தினால் பயனடைந்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் பொதுவாக அனைத்து அரசாங்க பாடசாலை மாணவர்களும் அதன் உச்ச பலனை பெற்றுக் கொள்ள வேண்டி இத்திட்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். அதாவது, ஐந்து நாட்களும் சோறு என்பதற்கு பதிலாக அதை மூன்று நாட்களாகவும் ஓர்நாள் தானிய உணவு, ஓர்நாள் மாப்பொருளுடன் பருப்பு அல்லது மரக்கறி என்றிருந்தாலே மாணவர்களுக்கு உணவின் மீதான அலுப்பு பற்றின்மையை குறைப்பதுடனான ஆரோக்கியமான உணவையும் உட்கொள்ள வழிவகுக்கலாம்.

மாணவர்களின் நலனுக்காக மட்டுமே அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட போஷாக்கு காலையுணவு வழங்கும் திட்டத்தை மக்களான நாமும் முற்றிலும் தவிர்ப்பது என்பது உண்மையாகவே அறிவிலி செயலாகும். இப்படிப்பட்ட திட்டத்தின் மூலமே பல மாணவச் செல்வங்கள் வாரத்திற்கு ஓர் முட்டை வீதம் உண்ண சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே எம் அரசாங்கம் இத்திட்டத்தை அமுல்படுத்திய நோக்கத்தை அறிந்து, மதித்து பெற்றோர்களும் தம் சிறார்களுக்கு புரியும்படி போசணை உணவை பற்றியும் ஆரோக்கியம் குறித்தும் எடுத்துக் கூறி இவ்வாறு வழங்கப்படும் போசணைமிக்க காலையுணவை மாணவர்கள் உட்கொள்ள நீங்கள் எடுத்துக் கூற வேண்டும்.

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பது எவ்வளவு சத்தியமோ அதே போல தான் 'நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்' என்பதையும் கருத்திற் கொள்வோம்

**சமீஹா கியாஸ்.**

**மாவனல்லை.**

# மனக்குறை

-சிறுகதை-



‘ட்ரீங்... ட்ரீங்...’ ரியாவின் அலாரம் அடித்தது. சட்டென விழித்தவள் கண்ணைக் கசக்கியப் படி அலாரத்தை நிறுத்தி விட்டு, அருகில் படுத்திருந்த தன் இளைய மகளின் போர்வையை சரி செய்து விட்டு, கட்டிலுக்கு போடப்பட்டிருந்த நுளம்பு வலையை மெதுவாக அப்புறப்படுத்தி வெளியே வந்தாள். அறையை விட்டு வெளியேற முன்பே அந்த அறையில் போடப்பட்டிருந்த அடுத்த கட்டிலில் இருந்து அவளுடைய மூத்த மகள் ‘உம்மா நீங்க பாத்ரூம் ல இருந்து வந்த உடனேயே என்ன பேசி விடுங்க.’ என்று கர கரத்த குரலில் சொல்லி விட்டு தன் பக்கத்தில் இருந்த தங்கையை அணைத்துக் கொண்டாள். வேகமாக சமையலறைக்கு வந்தவள் கடிகாரத்தை பார்க்கிறாள். அதிகாலை 4 மணி.

விரைவாக காலைக்கடன்களை முடித்துக் கொண்ட ரியா தன் மூத்த மகள் சஜாவை எழுப்பி விட்டு தஹஜ்ஜத் தொழுகையில் ஈடுபட்டாள். தொழுகை முடிந்ததும் தன் இரண்டாவது மகள் சுபஹ் அதான் சொல்ல பத்து நிமிடங்களுக்கு முன் எழுப்புமாறு இரவு கூறியது நினைவுக்கு வந்தது. உடனே அவளையும் எழுப்பி விட்டு குர்ஆனை எடுத்து ஓதத் தொடங்கினாள். பிள்ளைகள் அவரவர் வேலைகளை செய்தார்கள்.

சுபஹ் அதான் ஒலித்ததும் தொழுது விட்டு காலை உணவை தயாரித்து அவரவர் சாப்பாட்டுப் பெட்டிகளில் போட்டு, போத்தல்களில் நீரையும் நிரப்பி பைகளில் போட்டு விட்டாள். அல்ஹம்துலில்லாஹ். அவளின் பெரிய வேலை முடிந்து விட்டது.

இப்போது கடைக்குட்டி தியாவை எழுப்பினாள். தியா இரண்டாம் வகுப்பில் படிக்கிறாள். கொஞ்சம் செல்லமும் கூட. அதனால் பாட்டுக்கள் பாடி தமாசுடன் அவளை எழுப்பி பல் துலக்கி விட்டு, கால், கை, முகம் கழுவி, வுழு செய்ய வைத்து துடைத்து சுபஹ் தொழ வைத்தாள். பின் சாப்பாட்டை ஊட்டி பாடசாலை சீருடையை அணிய வைத்து காலை துஆக்களை சொல்லிக் கொடுத்தாள். அதற்கிடையில் மூத்தவர்கள் இருவரும் தயாராகி வந்து துஆவில் இணைந்து கொண்டனர். பின் அவரவரின் பாடசாலை வான்கள் வந்ததும் ஏற்றிவிட்டு வீட்டினுள் வந்து ஓய்வாக அமர்ந்து பெருமூச்சு விட்டாள். தன்னை அறி

யாமல் புன்னகைத்தாள். ஏன்? அவளுக்கு ஒவ்வொரு நாளும் தன் பிள்ளைகளை திருப்தியாக தயார் படுத்தி மகிழ்ச்சியாக வழியனுப்பி வைப்பதால் வரும் பூரிப்பின் புன் னகை அது. பெற்றோர் சொல்லுக்கு அடக்கமாகவும், மார்க்க விடயத்தில் பேணுதலாகவும், உலகக் கல்வியிலும் மத்திம தரத்திலும் இருக்கும் அவளு டைய பிள்ளைகள், இறைவன் அவளுக்கு அளித்த மிகப்பெரிய பரிசாக நினைத்து அகமகிழ்ந்து கொண் டாள்.

சற்று நேரம் அப்படியே இருக் கையில், பசி எடுப்பதை உணர்ந் தாள். சாப்பாட்டை தட்டில் எடுத்து வந்து சாப்பாட்டு மேசையில் அமர்ந்தவள் தன் கைப்பேசியை எடுத்து சமூக வலைதளங்களை பார்த்த வண்ணம் சாப்பாட்டை வாயில் போடுகிறாள். வாட்சப் அப் ஐ திறந்ததும் அவளுடைய உயர் தர நண்பிகள் குழுவில் அறுபத்தைந்து குறுஞ்செய்திகள் வந்திருந்தன. அதை திறந்து பார்க்க விரும்பாதவள் தன் பிள்ளைகளின் பாடசாலை குழுக்களில் வந்திருக்கும் செய்தி களையும், குடும்பக் குழுக்களில் வந்திருப்பவற்றையும் பார்த்து விட்டு தொலைபேசியை அப்புறப் படுத்தி வைத்து விடுகிறாள். கூடவே சாப்பாடும் தட்டில் முடியவே, கைகளையும் தட்டையும் கழுவி விட்டு தன் மடிக்கணினியை எடுத்துக் கொண்டு கட்டிலில் அமர்கிறாள். அது அவளுக்கு மிகவும் விருப்ப மான நேரம். ஏனென்றால் கணினியில் வேலை செய்வது அவளுக்கு மிகவும் விருப்பம்.

ஆர்வமாக வேலை தொடங்க முன் தொலைபேசி அழைப்பு சத் தம் கேட்கிறது. அது கொழும்பில் வேலை செய்யும் அவளுடைய கணவன் அழைக்கும் நேரம். விரைவாக எழுந்து சென்று தொலை பேசியை எடுக்கிறாள். ஆனால் அழைத்தது அவளுடைய கணவனல்ல. அவளுடைய நண்பி ஸாலிஹா. டாக்டர் ஸாலிஹா என்று பதியப்பட்டிருந்தது.

ரியாவின் முகம் சற்று சுழித்துப் போனது. ஏன் அந்த சுழிப்பு. ஸாலி ஹாவும் ரியாவும் பாடசாலையில் ஒரே வகுப்பில் படித்தவர்கள். கிட்டத்தட்ட சமமாகப் படித் தார்கள். தற்போது ஸாலிஹா வைத்தியராக இருக்கிறாள். ரியா இல்லத்தரசியாக இருக்கிறாள். அது தான். பொறாமையா? இல்லை. தான் இலட்சியத்தில் தோற்றுப்போய் விட்டதாக ரியாவிடம் இருக்கும் தாழ்வு மனப்பான்மை. அவள் ஸாலி ஹாவோடு மட்டும் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை. நல்ல பதவியில் இருக்கும் எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அவளுக்கு ஒரு குற்ற உணர்வு ஏற்படும். ஏனென்றால் அவளுடைய இலட்சியம் அவ்வளவு பெறுமதியாக இருந்தது. தான் ஒரு வைத்தியராகி சமூகத்திற்கு எவ்வளவோ சேவைகள் செய்ய நினைத்திருந்தாள். அது முடியா மல் போனது அவளுக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. தொலை பேசி மணி அடிப்பதை பார்த்துக் கொண்டிருந்தவள், வேண்டா வெறுப்பாக விடையளித்தாள். சுக செய்திகளை விசாரித்தாள். ஸாலிஹா அவள் அழைத்த கார ணத்தை கூறினாள். அவர்களுடைய

வகுப்பு ஒன்று கூடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது அடுத்த வாரம் நடைபெற இருக்கிறது. அதற்கு ஸாலிஹாவிற்கு வரக் கிடைக்காதாம். முக்கியமான மாநாடு ஒன்று இருக்கிறதாம். அவளுக்கு ஒரு வேலைக்குமே நேரம் இல்லையாம். தொழிலோடு நேரம் முடியுதாம். பிள்ளைகளின் விடயங்களையோ, கணவனின் விடயங்களையோ சரியாகக் கவனிக்கக் கிடைப்பதில்லையாம். அதனால் குடும்பத்திலும் சரியான பிரச்சினை என்று அழுதாள். அவளுடைய நிலைமையை அடுத்த தோழிகளிடம் சொல்லி, ஒன்று கூடலுக்கு வரக்கிடைக்காததை நியாயப்படுத்துமாறு கேட்டுக் கொண்டாள். ரியாவும் சரி என்று ஏற்றுக்கொண்டு ஸாலிஹாவிற்கு ஆறுதல் கூறிவிட்டு தொலைபேசியை வைத்தாள். ஸாலிஹாவின் பேச்சின் மூலம் ரியா கண்கலங்கி விட்டாள். சத்தம் போட்டு அழ வேண்டும்போல் இருந்தது. தன்னை சுதாகரிக்க முயற்சி செய்தாள்.

மீண்டும் ஒரு தொலைபேசி அழைப்பு. அது ரியாவின் கணவன் காமில். கலக்கமான குரலில் ஸலாம் சொன்னாள். அதற்கு பதிலளித்த காமில், 'ஏன் குரல் ஒரு மாதிரி இருக்கு? டயடா இருக்குறீங்களா? வேலைகள் முடிஞ்சு தெண்டா கொஞ்சம் தூங்கி எழும்ப இருந்திச்சே? என்று கனிவாகக் கேட்டான். 'இல்ல. க்ளைமட் ஒரு மாதிரியா இருக்கு. மழை வரப்போற போல. அதுதான் சோம்பலா இருந்திச்சி. என்று தன் சோகத்தை மறைத்து விட்டாள்.

நான் இண்டைக்கு வீட்டுக்கு வரப்போறேன். தேவையான சாமான் லிஸ்ட் ஒண்டு போட்டு அனுப்புறீங்களா? அடுத்து, லன்ச் சமைக்க வானம். நான் எல்லாருக்கும் பிரியாணி எடுத்து வாரேன்.' என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்தான். ரியாவும் அவசரமாக தேவையான சாமான்களை பட்டியல்படுத்தி தொலைபேசியில் படமெடுத்து அனுப்பிவிட்டு கணனியின் அருகில் அமர்ந்தாள். ஆனாலும் அவளுடைய மனது அமைதியற்று இருந்தது. அதற்குக் காரணம் அவள் எண்ணத்தில் இருந்த பிழைகள். அதாவது, அவள் ஸாலிஹா நல்ல பதவியில் இருப்பதால் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதாக எண்ணியிருந்தாள். ஆனால் ஸாலிஹாவுக்கு அவளுடைய வேலைகளை கூட ஒழுங்காக செய்து கொள்ள முடியாமல் கணவன், பிள்ளைகளின் மகிழ்ச்சியில் பங்குக்கொள்ள வழியில்லாமல் இருக்கிறாள்.

அதே நேரம், ரியாதான் பட்டம், பதவிகள் இல்லாமல் இருப்பது மிகவும் துரதிஷ்டமாகக் கருதி மன உளைச்சலில் இருந்தாள். ஆனால் அவளுக்கோ சிறப்பான திட்டமிடலுடனான வாழ்க்கை முறை, போதுமான ஓய்வு, அன்பான கணவனின் அரவணைப்பு, பிள்ளைகளுடனான சுமுகமான உறவு போன்ற இறைவனின் அருள் கிடைக்கப்பெற்றிருப்பது விளங்காமலே இருந்திருக்கின்றது. அவளுக்குக் கிடைத்தது போன்றொரு வாழ்க்கையை வாழ்வதற்கு பலர் ஏங்குகிறார்கள் என்பது அவளுக்குப் புரியாமலே இருந்திருக்கின்றது. அது அவளது மன

துக்கு புரியும் போது சற்று இதமாக இருந்தது. அப்படியே கட்டில் அருகில் இருந்த ஜன்னலைத் திறந்து விட்டாள். லேசாக மழை தூறி கொண்டிருந்தது. அந்த இத மான குளிர்ச்சி அவள் பெற்ற இன்பமான வரங்களை கண்முன் கொண்டுவந்தது.

ரியாவின் வீட்டில் ரியாவின் உம்மா, வாப்பாவிற்கு மூன்று பிள்ளைகள். ரியாவுக்கு ஒரு நானா, ஒரு தங்கை. ரியாவின் நானா ஒரு வங்கிக்கணக்காளர்.


இற்றைக்கு சுமார் பத்து வரு டங்களுக்கு முன் ரியா க. பொ. த. உ /த பரீட்சை எழுதிவிட்டு வீட்டில்இருந்தாள். பல்கலைக்கழக அனுமதிக்கு சற்றுக்குறைவாகவே பெறுபேறுக்கள் அமைந்தன. அவள் உயிரியல் விஞ்ஞான பிரிவில் படித்திருந்தமையால் திறந்த பல் கலைக்கழகத்தில் விஞ்ஞான பட் டதாரியாக படித்துக் கொண் டிருந்தாள். அப்போது தான் காமி லுக்கு ரியாவை திருமணம்பேசி நிச்சயிக்கப்பட்டது. காமில் கொழும் பில் ஒரு பெரிய நிறுவனத்தில் முகாமையாளராய் இருந்தார். திருமணத்தின் பின் தொடர்ந்து படிக்கலாம் என்று அனைவரும் கூறியதால், ரியா திருமணத்திற்கு சம்மதித்தாள். திருமணமும் இனிதே நடந்தது. மிகவும் நல்ல புரிந்து ணர்வோடு, மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள். ஒரே ஒரு குறை, ரியாவிற்கு தொடர்ந்து படிக்க முடியவில்லை. காமில் பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை தான் வீடு வருவான். அதனால் அவளை பல்கலைக்கழகத்திற்கு அழைத்துச் செல்ல ஆளில்லை. அத னால் அவளுடைய கல்வி நிறுத்தப் பட்டது. அது ரியாவிற்கு பெரிய இழப்பாகவே இருந்தது. ஆனாலும் காமில் ரியாவிற்கு எந்த குறையும் வைக்கவில்லை. காமிலின் வீட்டி லும் காமிலின் பெற்றோரும், ஒரு சகோதரியும் மட்டுமே இருந்தார் கள். காமிலின் மூத்த சகோதரி திருமணமாகி வீட்டோடு இருந்த மையால் காமில் வேறு வீடு கட்டி அங்கே குடியேறினர்.

காலம் உருண்டோடியது. அவர் களுக்கும் இரண்டு வருட இடை வெளியில் மூன்று பெண் பிள்ளைகள் பிறந்தார்கள். அளவான வருமானத் தில் அழகான வாழ்கை. சிறிய சிறிய மனக்கசப்புகள் நோய் நொடிகள் தவிர பெரிதாய் பிரச்சினைகள் வந்ததில்லை. காமில் ரியாவின் எந்த வேண்டுகோளுக்கும் எதிர்ப்பு தெரிவித்ததில்லை. தான் எடுக்கும் சம்பளம் முழுவதையும் ரியாவிடம் கொண்டு வந்து கொடுப்பான். தன் தேவைகளுக்கும் அவளிடமே கேட் டுப் பெற்றுக்கொள்வான். இதை விட ஒரு பெண்ணுக்கு எப்படி நிம்மதியான வாழ்க்கை அமைய முடியும். ரியாவும் எந்த விதத்திலும் குறைந்தவளல்ல. குடும்பச் செலவை திட்டமிட்டு நிறை வேற்றிவிட்டு, அதில் மீதமாகும் பணத்தில் பொது வேலைகளுக்கும், நோய் நிவாரண சேகரிப்புகளுக்கும் நன்கொடையாகக் கொடுத்து விடுவாள். அது அவளுக்கு ஆத்ம திருப்தி தரும். இவ்வாறு இறைவன் அவளுக்கு அளித்துள்ள அருட்கொடைகளைப் பார்க்கும் போது அவள் ஒரு அதிஷ்டசாலி என்பது விளங்கியது. வாழ்க்கை

யின் திருப்தியும், வெற்றியும், மகிழ்ச்சியும் பட்டம் பதவிகளில் மாத்திரம் கிடைக்காது. அது அவரவருக்கு கிடைத்திருக்கும் வரங்களை அனுபவிப்பதிலேயே கிடைக்கிறது என்பதை விளங்கிக் கொண்டாள். அவளுடைய சிந்தனை தெளிவு பெற்று அவளுடைய மனக்குறை நீங்கியதோடு மழைத்தூறலும் விட்டு வானம் தெளிந்திருந்தது. சட்டென சுய நினைவுக்கு வந்தவள், தன் கணவன் வரும் நேரம் நெருங்கி விட்டதை உணர்ந்து அவருக்கு விருப்பமான அன்னாசிப் பழப் பானம் தயாரித்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு, கணவனின் வருகைக்காக காத்திருந்தாள், மனக் குறை இன்றி மன நிறைவோடு.

Dr. **கன்சுல் ரிபாயா ஹனிபா**

# அந்தாதி வண்ணங்கள் நூல் வெளியீடு




நிந்தவூர் கமு அல்-மஸ்ஹர் பெண்கள் உயர் தர பாடசாலையிலே க/பொ சாதாரண தரம் பயிலும் மாணவியான றீனத் றாசிக். எழுதிய அந்தாதி வண் ணங்கள் என்ற கவிதைநூல் 2025 பெப்ரவரி மாதம் 13ம் திகதி நிந்தவூர் அல்- மஸ்ஹர் பாடசாலையிலே மிகவும் சிறப்பான முறையில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கமு/கமு அல் - மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அதிபர் அல்ஹாஜ் ஏ.சி ஹாமிது அவர்கள் தலைமை வகித்ததோடு, கௌரவ அதிதியாக தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப். எச். ஏ ஷிப்லி கலந்து கொண்டு இந்த நூலுக்கு விமர்சன உரையை வழங்கி சிறப்பித்தார். மேலும் விசேட அதிதிகளாக பாடசாலையின் பிரதி அதிபர்களான திருமதி டி. உவைஸ், திருமதி என். யாசீன் பாவா அவர்களும், உதவி அதிபர்களான ஜனாப் எஸ். எம் ஹனிபா, திருமதி எம். டி பெனாசிரா அவர்களும், பாடசாலை ஆசிரியர்கள்,குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் அனைத்து மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.






# டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் மூன்றாவது நூலான மஞ்சள் மாம்பூ ஹைக்கூ நூல் வெளியீடு

ஏறாவூர் நகர சபை பொது நூலகங்கள் இணைந்து நடாத்திய தேசிய வாசிப்பு மாதம்-2024 இறுதி நாள் விழாவும் டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் எழுதிய மஞ்சள் மாம்பூ ஹைக்கூ கவிதை நூல் வெளியீடும் கடந்த 21/2/2025 வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 4 மணிக்கு வாவிக் கரைப் பூங்காவில் மிகவும் சிறப்பாகவும் கோலாகலமாகவும் நடை பெற்றது.

ஏறாவூர் பொது நூலக ஏற்பாட்டில் இவ்விழா பலவிதமான நிகழ்வு களோடு ஜனரஞ்சகமாக அமையப் பெற்றிருந்த இவ்விழாவில் ஏறாவூர் நகரசபையின் செயலாளர் எம்.எச்.எம் ஹமீம் தலைமை தாங்க, ஏறாவூர் நகரபிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். செங்கலடி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எச் எம் மௌஜூத், வைத்திய அதிகாரி டாக்டர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சாபிறா வஸீம், சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அன்பழகன் குரூஸ், ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் சுதாகரி மணிவண்ணன், கலாச் சார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ரிஸ்வான் மௌலவி,

கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ.எம்.எம் மஹ்பூல் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் நஸீரா எஸ் ஆப்தீன் , ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கவிஞருமான எஸ் ஏ றஸாக் உட்பட பிர முகர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், ஊட கவியலாளர்கள், பெற்றோர்கள், மாணவர் கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கு கொண்ட இப்பெரு விழாவில் சிறப்பு அம்ச மாக டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்க ளின் மூன்றாவது நூலான 'மஞ்சள் மாம்பூ' ஹைக்கூ கவிதை நூல் வெளியீடு செய்யப் பட்டது. முதல்பிரதியை டாக்டர் ஜலீலா







முஸம்மில் அவர்களின் தாயார் அவர்கள் பெற்றுக் கொள்ள அடுத்த படியாக அதிதிகளும் கவிஞர்களும் இலக்கிய ஆர்வலர்களும் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

'முற்றத்து மல்லிகை' எனும் ஏறாவூர் எழுத்தாளர்களின் ஆவணக் காப்பகத்திற்காக ஏறாவூர் பொது நூலக நூலகர் அவர்களுக்கும் மஞ்சள் மாம்பூ பிரதி வழங்கி வைக்கப்பட்டது.

நூல் நயவுரையை மிகவும் சிறப்பான முறையில் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கவிஞருமான எஸ் ஏ றஸாக் அவர்கள் நிகழ்த்தினார்கள். ஏற்புரை எழுத்தாளர் கவிஞர் நூலாசிரியை டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் இந்த 'மஞ்சள் மாம்பூ' ஹைக்கூ நூலானது 2024 ஜூன் மாதம் தமிழ் நாடு புதுச்சேரியில் இடம் பெற்ற ஹைக்கூ மாநாட்டில் சர்வதேச கவிஞர்களின் (அமெரிக்கா, மலேஷியா, இலங்கை, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஐக்கிய அமீரகம் மற்றும் தமிழ் நாடு)

63 ஹைக்கூ நூல்களின் ஒருமித்த வெளியீட்டு உலக சாதனை விழாவில் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இம்மாநாடும் நூல் வெளியீடும் ஒரு சாதனை நிகழ்வாக 'ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்டு' - All India Book of Records இல் இடம்பிடித்து சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்க விடயமாகும்.

நூல் பெற தொடர்பு கொள்ளுங்கள்

+94771308495

jaleelamuzammil@gmail.com

## பன்முக ஆளுமை கொண்ட 'மின்னும் தாரகை'

# கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்

இலங்கையில் எழுத்து, பத்திரிகை, இலக்கியம், ஒலிபரப்பு என்று பல துறைகளில் 'மின்னும் தாரகை'யாக விளங்கும் மூத்த பெண் ஆளுமைதான் கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்.

உடுதெனிய முஸ்லிம் மகா வித்தியாலயம், மடவளை மதீனா தேசிய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியான நூருல் அயின் கொழும்பு திறந்த பல்கலைக் கழகத்தில் பொதுசனத் தொடர்புத்துறை சான்றிதழும், தொலைக் கல்வி நிறுவனத்தின் பொதுசனத்துறை டிப்ளோமா பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத் துறை டிப்ளோமா பட்டமும் பெற்றவர்.

இளம் மாதர்களின் முஸ்லிம் சங்கத்தின் ஊடாக இணைப்பாளராகவும், அதன் உப தலைவியாகவும் இருந்து சமுக சேவையிலும், தனது பங்களிப்பை நல்கி வருகிறார்.





இந்தியாவுக்கு விஜயம் செய்த போது பனையூரில் உள்ள கவிக்கோ அப்துல் ரகுமானின் இல்லத்தில் வைத்து கவிக்கோவை நேரில் சந்தித்த இனிய தருணம்...

**அகில இலங்கை சமாதான நீதவான்.**

கொழும்பு உயர் நீதிமன்ற ஜூரர் சபை உறுப்பினராக செயற்பட்டவர், நீதி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அரச மொழி பெயர்ப்பாளர் என்று பல கௌரவ மான பதவிகளை வகித்து வருகிறார்.

ஊடகத்துறையில் பெண்களின் குறிப்பாக முஸ்லிம் பெண்களின் பிரவேசம் மிகக் குறைவாக இருந்த கால கட்டத்தில் இவர் எழுத்துலகில் பிரவேசித்துள்ளார். 1975ல் பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி மூலம் வானொலியில் பிரவேசம் பெற்றவர் அவர். ஒலி பரப்புத் துறையில் மாதர் மஜ்லிஸ் பிரதித் தயாரிப்பாளராகவும் குரல் கொடுப்பவராகவும் திகழ்ந்தவர். வானொலியில் தமிழ்ச் சேவையிலும், முஸ்லிம் சேவையிலும், கவியரங்கு சிறுகதை போன்ற பல நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்கேற்பவர். தொலைக் காட்சிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளி லும் பங்குபற்றிப் பிரகாசிப்பவர்.

எழுத்துத் துறையிலும், பத்திரி கைத் துறையிலும் அவரின் பங்க ளிப்பு அளப்பரியன. அவரின் முதலாவது கவிதை 'பாவி நான் என்ன செய்வேன்'? என்ற தலைப் பில் 'உதயம்', பத்திரிகையில் வெளி யானது.

சுயாதீனப் பத்திரிகை சமாஜத் தின் தினபதி - சிந்தாமணி பத்திரி கைகளில் 1980 முதல் 1990 வரை ஆசிரிய பீடத்தில் கடமையாற்றிய திருமதி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் பத்திரிகைத்துறை ஜாம் பவான் எஸ்.டீ. சிவநாயகம் அவர் களால் புடம் போடப்பட்டவர்.

'ஜனனி' என்ற பத்திரிகையிலும் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய வர். அப்பத்திரிகையின் 'அரிவையர் அரங்கம்' என்ற மாதர் பகுதியை

பல வருடங்கள் தொடர்ந்து நெறிப் படுத்தி புகழ் பெற்றவர்.

இதழ்கள், சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் அவர் திறம்பட இயங்கியவர். அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல் அதிகாரியாக நியமனம் பெற்றிருந்த அவர், அத் திணைக்களத்தின் 'திங்கள்' என்ற மாதாந்த சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் 'புத்தொளி' என்ற மாதாந்த பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் செயற்பட்டார். திணைக்களத்தின் 'தெசதிய' என்ற சிங்கள சஞ்சிகையின் சிறப்புக்கட்டுரை எழுத்தாளராகவும் அவரின் எழுத்துப் பணி விரிந்தது. அச் சஞ்சிகையில் அவர் அரசியல் தலைவர்களை நேர் கண்டு எழுதிய நேர்காணல் பெரும் வரவேற்பைப் பெற்றதோடு, அரச கருமமொழித் திணைக்களத்தின் 'இன ஐக்கியத்துக்கான ஊடகப் பங்களிப்புக்குரிய விருதையும் பொற்கிழியையும் பெற்றுக் கொடுத்தது. 'ஒளி அரசி' என்ற மாதாந்த மாதர் சஞ்சிகையின் ஆசிரியர் பீட ஆலோசகராகவும் அதன் சிரேஷ்ட எழுத்தாளராகவும் அவர் மிளிர்ந்தார்.

அவர் அரசாங்க தகவல் திணைக்களத்தில் மாவட்ட தகவல் அதிகாரியாக இருந்தபோது 'கொழும்ப புவத்' (கொழும்புச் செய்திகள்) எனும் சிங்கள மொழி மூல காலாண்டுப் பத்திரிகை வெளியிட்டார். அப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்து தொடர்ச்சியாக பல இதழ்களை வெளியிட்டார்.



ஏக புத்திரி நூருஸ் ஷப்னா நஜ்முல் ஹுசைன் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்த போது...!

தகவல் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ செய்தி இணையத்தளமான www.news.lk என்ற இணையத்தளத்தின் தமிழ்ப் பிரிவில் தகவல் அதிகாரியாக (information Officer) கடமையாற்றிய அனுபவத்தோடு பத்திரிகை, எழுத்து, இலக்கியத் துறையில் ஐந்து தசாப்தங்களாக இயங்கி வருபவர்.

கட்டாரிலிருந்து வெளிவரும் 'துணிந்தெழு' என்ற சஞ்சிகையின் ஆசிரிய பீட ஆலோசகராகவும் திகழ்கிறார் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்.

பெண் எழுத்தாளர்களை அடையாளப்படுத்துவதில் முன்னிற்பவராகவும் எழுத்துலகில் மதிக்கப்படும் அவர், இதுவரை

1. 'பண்பாடும் பெண்'- கட்டுரைத் தொகுதி (1995),
2. 'மின்னும் தாரகைகள்'- (2018) - இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு நூல்,
3. 'நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள்' (2017) தொகுப் பாசிரியர்.



இலங்கைக்கு வருகை தந்த தென்னிந்திய பிரபல பட்டிமன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கரன் அவர்களை ஒளி அரசி சஞ்சிகைக்காக நேர்காணல் செய்த போது...

4. 'பூஞ்செண்டு' கவிதைத் தொகுப்பு (2023),
5. 'திதுலன தாரக்கா' - (2921) இது மின்னும் தாரகைகளை சிங்களத் திலும் வெளிச்சமிட்ட நூல்.

*இந்த ஐந்து நூல்களையும் இவர் வெளியிட்டிருக்கின்றார்.*

***'எய்ட்ஸ் நோயும் பெண்களும்', 'இலங்கை முஸ்லிம் பெண்களின் ஊடகப் பங்களிப்பு', 'மின்னும் தாரகைகள் - பாகம் 2'*** *ஆகியவை விரைவில் வெளிவரவிருக்கும் அவ ரின் ஆய்வு நூல்களாகும்.*

*140 பெண் ஆளுமைகளை அவர் காய்தல் உவத்தலின்றி தனது மின் னும் தாரகைகள் நூலில் அடையா ளப்படுத்தியுள்ளார்.*

*உடுதெனிச் செல்வி, பின்த் ரஷீத், பின்த் ஸல்மா, கண்ணொளி என்ற புனைப் பெயர்களிலும் எழுதிய ரஷீத் நூருல் அயின் திரு மணத்தின் பின் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் என எழுதி வருகிறார். தனது ஊடக, எழுத்துப் பணிகளுக்காக விருதுகளையும் பரிசுகளையும் பெற்றிருக்கின்றார்.*

***2006 - இலங்கை கலாசார திணைக்களம் வழங்கிய கலா பூஷண விருது***

***டென்மார்க் சிவமீரா அறக் கட்டளை நிறுவனமும் தமிழ்நாடு வளரி சஞ்சிகையும் இணைந்து நடத்திய சர்வதேச கவிதைப் போட்டியில் முதலாம் இடம்***

***(சிவமீரா ஞாபகார்த்த விருதும் பொற்கிழியும்)*** *என்பன அவர் பெற்ற விருதுகளில சில.*

*இலக்கியத் தாரகை, தாரகை களின் தண்மதி, கலாஜோதி, விவேக விண்மீன் , ஊடக நாயகி, தகவல் ஜோதி என மேலும் பல கௌரவப் பட்டங்களுக்கும் சொந்தக்காரி இவர்.*

*வெளிநாடுகளுக்கும் கலைப்பய ணம் செய்துள்ளார் கலாபூஷணம் நூருல் அயின். மலேசியாவின் தலை நகர் கோலாலம்பூரில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டிலும். தாய்லாந்தின் தலை நகரான பெங்கொக்கிலும் மற்றும் இந்தியா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற கலை இலக்கிய நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்தவர் அவர்.*

*மலையகத்தைச் சேர்ந்த ஹேவா ஹெட்ட தேர்தல் தொகுதியிலுள்ள உடுதெனியவில் பிறந்தவர் நூருல் அயின். காலஞ் சென்ற அல்ஹாஜ் எம்.எம். ரஷீத், அல்ஹாஜா உம்மு ஸல்மா தம்பதியின் சிரேஷ்ட புத்திரி. வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவரும் பிரபல கவிஞருமான கவிமணி என். நஜ்முல் ஹுசைன் இவரது வாழ்க்கைத் துணைவராவார்.. இவர்களின் ஏகப்புதல்வி சட்டத் தரணி நூருஸ் ஷப்னா சிராஜுதீன்.*

இவரும் வளர்ந்து வரும் ஒரு கவிஞராவார். இலங்கை சட்டக் கல்லூரி இந்து மகா சபை நடத்திய கவிதைப்போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவர்.

இவரது உடன்பிறப்புகளும் இலக்கியத்துறையில் அதிக ஈடு பாடு கொண்டவர்கள் தான். இவரது மூத்த சகோதரரான சட்டத்தரணி ரஷீத். எம்.இம் தியாஸ் தற்சமயம் தினகரன் வார மஞ்சரியில் 'படித்ததும் பகிர்வதும்' பக்கத்துக்கு பொறுப்பாசிரியராக இருக்கிறார்.

இலங்கையில் தீவிரவாத தாக்கு தல்கள் நாட்டில் உச்சக் கட்டத்தில் இருந்த காலத்திலும் கூட தனது உயிரையே பணயம் வைத்து ஊடக பணி புரிந்த பெருமை நூருல் அயினை சாரும். இலங்கை ஊடக வரலாற்றில் ஒரு முஸ்லிம் பெண் பத்திரிகையாளர் இவ்வாறு களப் பணி ஆற்றியமை பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

கொழும்பில் மத்திய வங்கி குண்டு வெடித்த போது இவர் கொழும்பு கொள்ளுப்பிட்டி பகதல ரோட்டில் அமைந்திருந்த ஈரோஸ் இயக்கத் தலைவர் சங்கர் ராஜை தகவல் திணைக்கள தெசதிய என்ற சிங்கள சஞ்சிகைக்காக நேர்காணல் செய்து கொண்டிருந்தார். அச் சமயம் ஈரோஸ் தலைவரின் அலுவலக சுவர்கள் கூட அதிர்ந் தனவாம். இவ்வாறு பல மயிர்கூச் செரியும் சம்பவங்கள் பலவற்றை தாம் கடந்து வந்த பாதையில் எதிர்நோக்கியுள்ளார்.

அவ்வாறே இலங்கையில் நடை பெற்ற தெற்காசிய நாடுகளின் உச்சி மாநாட்டில் பாகிஸ்தான் நாட்டுக்கான ஊடக இணைப் பாளராக கலந்து கொண்டுள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய நாடுகளின் மாநாட்டிலும் இவர் பல வெளி நாட்டு ஊடகவியலாளர்களுடன் இணைந்து ஊடக பணியாற்றியுள் ளார். தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டியிலும் இவர் கபடி விளையாட்டுப் போட்டிக்கு பொறுப்பாக இருந்து ஊடகப்பணி புரிந்துள்ளார். இவை தனது ஊடக வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வுகள் என குறிப் பிடுகிறார். 2018.11.11ஆம் திகதி யன்று இவரால் எழுதி வெளி யிடப்பட்ட 'மின்னும் தாரகைகள்' என்ற இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றி ஆய்வு நூல் இலங்கை இலக்கிய வரலாற்றில் ஒரு சாதனை நூல் என வர்ணிக்கப்படுகிறது.

இலங்கை இலக்கிய வரலாற்றில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றி வெளிவந்த முதலாவது ஆய்வு நூலென பல்கலைக் கழக பேராசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நூலை 04.12.2021 அன்று சிங்கள மொழியிலும் தானே எழுதி வெளி யிட்டு சாதனை படைத்துள்ளார் எமது அட்டைப்பட அதிதியான நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்.

2018 ஆம் ஆண்டுக்குப் பின் னர் நூல்களை வெளியிட்ட முஸ் லிம் பெண் எழுத்தாளர்களை இனங்கண்டு தனது சிங்கள

ஆய்வு நூலான 'திதுலன தாரக்கா' வில் உள்வாங்கியுள்ளார். இதன் படி நூல்களை வெளியிட்ட முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் 135 பேர் மின்னும் தாரகை களாக இந்நூலில் வெளிச்சமிடப் பட்டுள்ளனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவியர் மூவர் இந்த மின் னும் தாரகை நூலை ஆய்வு செய்துள்ளனர். இந்த ஆய்வறிக்கை மலேசியன் ஜேர்னல் என்ற ஆங்கில சஞ்சிகையில் வெளிவந்துள்ளது.

இவரது இந்த ஆய்வு முயற் சியை இந்திய இஸ்லாமிய இலக்கிய கழகத் தலைவரான பேராசிரியர் சேமுமு முஹம்மதலி உட்பட கல்வியிலாளர்கள் பலரும் பாராட்டி யுள்ளனர்.

இந்த மின்னும் தாரகை நூல் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, கட்டார் போன்ற நாடுகளில் எல் லாம் மின்னுகிறது. குறிப்பாக கட்டார் தேசிய நூலகத்தில் கூட இந்த நூலை பெற்று வாசிக்கலாம் என்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயமே.

இந்த நூலின் அறிமுக விழாவை ஜே.எம்.பாஸித்தை பணிப்பாளராக கொண்ட கட்டார் ஸ்கை தமிழ் வலையமைப்பினதும் கட்டார் முத்தமிழ் மன்றம் மற்றும் CWE ஆகிய அமைப்புகள் கூட்டாக இணைந்து நடத்தியமையும் குறிப் பிடத்தக்கது.

இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய முதலாவது ஆய்வு நூலான

***'மின்னும் தாரகை'*** யின் இரண் டாம் பாகத்தையும் வெளியிடும் முயற்சியில் சகோதரி நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன் தற்சமயம் ஈடு பட்டுள்ளார் என்ற நற்செய்தியை எமது வாசகர்களுக்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்

எனவே புதிதாக நூல்களை வெளியிட்ட முஸ்லிம் பெண் எழுத் தாளர்கள், தாங்கள் எழுதிய நூலின் ஒரு பிரதியுடன் உங்களைப்பற்றிய தகவல்களையும் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள் கின்றார். .

**Mrs. Noorul Ain Najmul Hussain,**
**No.: 03,**
**Richard De Zoysa Media Housing Complex, Barratarmulla.**
**Mobile No.: 0714842169**

பன்முக ஆளுமைக் கொண்ட 'மின்னும் தாரகை கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன் அவர்களை எமது முத்தமிழ் கலசம் சஞ்சிகை அட்டைப்பட அதிதியாக கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறது.

சர்வதேச மட்டத்தில் புகழ் பெற்ற இந்த பன்முகத் திறமை கொண்ட ஆளுமை 'மின்னும் தாரகை கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன் அவர் களை சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, எமது முத்தமிழ் கலசம் சஞ்சிகை அட்டைப்பட சிறப்பு அதிதியாக கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைவதுடன், சகோதரி நூருல் அயின் நஜ்முல் ஹுஸைனை முத்தமிழ் கலசம் சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.



டென்மார்க்சிவமீரா அறக்கட்டளையும்தென்னிந்திய வளரி சஞ்சிகையும் இணைந்து நடத்திய சர்வதேச கவிதைப் போட்டியில் முதலாமிடம் பெறாறமைக்காக சிவமீரா விருதும் பொற்கிழியும் பெற்றுக் கொண்ட தருணம்..



கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தரிமிருந்து பத்திரிகைத்துறை டிப்ளோமா பட்டம் பெறும் போது…




அரச விருதான கலாபூஷண விருது பெற்ற போது




மலேசியாவில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் போது இந்திய பிரபல பேச்சாளர் பேராசிரியை பர்வீன் சுல்தானாவை சந்தித்த போது…




தெற்காசிய நாடுகளின் அணிசேரா மாநாடு இலங்கையில் நடைபெற்ற போது பாகிஸ்தான் நாட்டுக்கான ஊடக இணைப்பாளராக பணி புரிந்த வேளை பாகிஸ்தான் தொலைகாட்சி நிலைய பெண் ஊடகவியலாளர்களுடன்….





## இவர் இதுவரை வெளியீடு செய்துள்ள நூல்கள்








பிரான்ஸிலிருந்து தமிழ் முழங்கும்

# தமிழ்நெஞ்சம்

**படியுங்கள்**


**பகிருங்கள்**


**இணையத்தில் படிக்கலாம்**

**tamilnenjam.com**

**முற்றிலும் இலவசம்**







**நீங்களும் எழுதலாம்**

e-mail :

editor@tamilnenjam.com

9 772719 252001